
பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60
Registered as a Newspaper
உதயன்
சுடர் : 40
கதிர் : 33
ஞாயிற்றுக்கிழமை
29 டிசெம்பர் 2024
மார்கழி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன்!

யாழ்., டிசெ. 29
தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராக சுமந்திரன் 14

# தமிழரசின் பதில் தலைவராக சீ.வி.கே.சிவஞானம் தெரிவு!



## மாவை அரசியல்குழுவின் தலைவர் மத்தியகுழுவில் நேற்றுத் தீர்மானம்

வவுனியா, டிசெம்பர் 29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக சீ.வி.கே.சிவஞானமும், அரசியல் குழுவின் தலைவராக மாவை சேனாதிராஜாவும் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர். 14

## மாவையே என்றென்றும் தலைவராக இருப்பார்!

### மத்திய குழுவில் சட்டவிரோதச் செயற்பாடு வெளிநடப்புச் செய்த சிவமோகன் ஆவேசம்

வவுனியா, டிசெ. 29
தமிழரசுக் கட்சியின் தலைவரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவுக்கு இல்லை. தலைவர் தலைவராகவே இருப்பார். தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சட்டவிரோதமாகச் செயற்படுகின்றது என்று தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார். 14

### கடந்த நாடாளுமன்றத் தேர்தலில்

## தமிழரசிலிருந்து விலகி போட்டியிட்டவர்கள் நீக்கம்

வவுனியா, டிசெ. 29
கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஊடாகப் போட்டியிட்டவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.
இது தொடர்பில் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-
கடந்த தேர்தலின் 14

## தமிழரசுக் கட்சியிலிருந்து சிவமோகன் இடைநிறுத்தம்

வவுனியா, டிசெ. 29
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மருத்துவர் சிவமோகன் கட்சியில் இருந்து நேற்று இடைநிறுத்தப்பட்டுள்ளார்.
கட்சியின் வேட்பாளர்களை நேரடியாகத் தாக்கி ஊடக சந்திப்புகளை நடத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காகவே அவர் கட்சியில் இருந்து 14

## 15 லட்சம் ரூபா பண மோசடி: முன்னாள் முகாமையாளர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 29
இலங்கை வங்கியின் முன்னாள் முகாமையாளர் ஒருவர், பெருந்தொகை பணமோசடியில் ஈடுபட்டமைக்காக யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் 14

### தேசிய மக்கள் சக்தியினர்

## பொய்களைக் கூறியே ஆட்சியைப் பிடித்தனர்

கொழும்பு, டிசெ. 29
ஆயிரக்கணக்கான பொய்களை அள்ளிவீசியே தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியது. அன்று அந்தக் கட்சியினர் கூறிய பொய்களே இன்று அவர்களுக்கு 14


## இரண்டரை வயதேயான சிறுமி மீது தாக்குதல்!

### குடும்ப வன்முறையே காரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 29
குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட இரண்டரை வயதுச் சிறுமியொருவர், மோசமான காயங்களுடன் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 14

## 50க்கும் மேற்பட்ட குற்றங்கள்: சந்தேகநபர் வவு.வில் கைது!

வவுனியா, டிசெ. 29
வவுனியாவில் 50க்கும் மேற்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்று தேடப்பட்டுவந்த பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். 14



## வாளுடன் இளைஞர் கைது!

யாழ். டிசெ. 29
காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், வாளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 14




'எல்லாமும் பதில் பதில் எண்டு கடைசியா கட்சியும் பதிலாப் போகப்போகுது போல'

## மஹிந்தவின் பாதுகாப்பு மேலும் குறைக்கப்படும்!

### அரசாங்கமும் விடாப்பிடி

கொழும்பு, டிசெ. 29
மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே பாதுகாப்பு நீக்கப்பட்டது. தேவையேற்பட்டால் அவருக்கு வழங்கப்பட்டுவரும் பாதுகாப்பு மேலும் குறைக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.
அமைச்சர் அபேசேன இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:- 14

## மூச்சுத் திணறல்: முதியவர் இறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29
மூச்சுத் திணறல் ஏற்பட்டு முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த காசிப்பிள்ளை குகேந்திரன் (வயது -62) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
நேற்று மதியம் தனது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்தபோதே அவருக்கு மூச்சுத் திணறல் 14

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிவழியில் செல்வதற்கும் தமிழ்த் தேசியக் கட்சி தயார்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், டிசெ. 29**

**ரெலோ மற்றும் புளொட் அமைப்புகள் தனித்து செயற்பட முற்படுமானால் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியிலிருந்து பிரிந்து தமிழ்த் தேசியக் கட்சி தனித்துக் களமிறங்கும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் ரெலோ மற்றும் புளொட் இயக்கம் தனித்துச் செயற்பட முனையுமானால் தமிழ்த் தேசியக் கட்சியாக தனித்துச் செயற்படுவதற்குத் தயாராக இருக்கின்றோம். குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெற இருக்கின்ற அனைத்து உள்ளூராட்சி மன்ற தேர்தல்களிலும் வேட்பாளர்களைத் தெரிவு செய்து தேர்தல் களத்தில் நிற்போம்.

அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (இன்று) தமிழ்த் தேசியக் கட்சியின் நிர்வாகக்குழு கலந்துரையாடவுள்ளது - என்றார். (ச-125)

# ஐ.ம.சக்தி மீது விரக்தி; அரசியலிலிருந்து ஓய்வு

கொழும்பு, டிசெ.29

ஐக்கிய மக்கள் சக்தியின் பாணந்துறைத் தொகுதி அமைப்பாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான லலித் எல்லாவல அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

தகுதியான தலைவர்கள் இல்லையென்பதாலேயே அரசியலில் விரக்தியடைந்து தான் இந்த முடிவை எடுத்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலுக்கு வரும்போது ஒரு சைக்கிள்கூட இருக்கவில்லை. தற்போதும் சைக்கிள் ஒன்று கூட இல்லாமல்தான் விடைபெறுகின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் போலியான வாக்குறுதிகளை வழங்கிவருகின்றார். அதே வழியில் அக்கட்சி பயணித்தால் யானை உண்ட விளாம்பழத்தின்நிலைதான் ஏற்படும் எனவும் எல்லாவல குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# பிற்போடப்பட்டது சங்கின் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கூட்டம் இன்று வவுனியாவில் இடம்பெறவிருந்த நிலையில் பிற்போடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ரெலோ இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுரேன்குருசாமியின் மனைவியின் தாயார் இறந்தமை காரணமாகவே குறித்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# அரச அதிகாரிகளுக்கு விசேட முற்கொடுப்பனவு

கொழும்பு,டிசெ.29

அரச அதிகாரிகளுக்கு 2025 ஆம் ஆண்டுக்கான விசேட முற்பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி அரச உத்தியோகத்தர்களுக்கு 4,000 ரூபா விசேட முற்பணம் வழங்கப்படவுள்ளது.

இந்த முற்பணத் தொகை எதிர்கால சம்பளத்தில் கழிக்கப்படும் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார தெரிவித்துள்ளார். (ச-இ)



# ஐ.ம.சக்தி 'டம்மி' நாமே எதிர்க்கட்சி

## திலித் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

ஐக்கிய மக்கள் சக்தி பெயரளவில்தான் எதிர்க்கட்சி. ஆனால் உண்மையான எதிர்க்கட்சி நாம்தான் என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

எமக்கு ஆளும் அதிகாரம் கிடைத்தால் எந்நேரத்தில் வேண்டுமானாலும் அதனைப் பொறுப்பேற்கத் தயார். ஆனாலும் ஜனநாயக வழியில்தான் நாம் ஆட்சியைப் பொறுப்பேற்போம்.

இந்த அரசாங்கம் ஐந்து வருடங்கள் பயணிக்க வேண்டும் என்பதுதான் எமது பிரார்த்தனை. அதே போல அடுத்து ஆட்சியை பொறுப்பேற்கக்கூடிய சக்தி எம்மிடமுள்ளது. துணிச்சல்மிக்க எதிர்க்கட்சி என்றால் அது சர்வஜன அதிகாரம்தான். ஐக்கிய மக்கள் சக்தி என்பது பெயரளவில் உள்ள எதிர்க்கட்சி என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ஓய்வுபெறுகிறார் சவேந்திரசில்வா



கொழும்பு, டிசெ.29

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா இம்மாதம் 31ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது சேவைக் காலத்தை 2024 டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடித்திருந்தார்.

இந்த நிலையில் புதிய அரசாங்கத்தின் கீழ் அவருக்கு பதவி நீடிப்பு வழங்குவது குறித்த திட்டங்கள் தொடர்பில் வினவிய போது,

சவேந்திரசில்வாவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவியை நீக்குவதா அல்லது தக்கவைப்பதா என்பது குறித்து அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

# யோசிதவுக்கு அழைப்பு

கொழும்பு,டிசெ.29

கதிர்காமத்தில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியின் உரிமை தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்சவை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைத்துள்ளது.

அதன்படி, ஜனவரி 3ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஊடகர் மீது தாக்குதல் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 29

கிளிநொச்சியில் ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை ஏ-9 வீதியில் வைத்து குறித்த ஊடகவியலாளர் மீது வாகனமொன்றில் வந்த குழுவினர் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இரு சந்தேகநபர்களை நேற்றுக் கைதுசெய்துள்ளனர். அவர்களை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-214)

# புதிய கூட்டணிக்குத் தயாராகும் சு.க.

கொழும்பு,டிசெ.29

உள்ளூராட்சிமன்றம் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். சுதந்திர க்கட்சியின் உறுப்பினர்கள் பலருடனும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எம்முடன் இணையவுள்ளவர்கள் யார் என்பது குறித்து விரைவில் அறிவிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழரசுக் கட்சியின்


# மத்தியகுழுக் கூட்ட வாயிலில் அறிவுறுத்தல்களுடன் பதாகை

வவுனியா, டிசெ. 29

வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில், குறித்த இடத்துக்கு முன்பாக கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களால் பதாகை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அதில் 'தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே' உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அத்துடன் கூட்டத்துக்கு வருகை தரும் மத்தியகுழு உறுப்பினர்கள் குறித்த பதாகையில் உள்ளவற்றை வாசித்துவிட்டு நுழையுமாறு பொதுச்சபை உறுப்பினர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-18,110)



# குழப்பவாதி அர்ச்சுனா

*சகாதேவன் சரமாரி*

யாழ்ப்பாணம், டிசெ. 29

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குழப்பத்தின் பிரதிநிதியாக உள்ளாரே தவிர மக்களின் பிரதிநிதியாகச் செயற்படவில்லை என்று பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் சகாதேவன் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அர்ச்சுனா சஜித் பிரேமதாஸவுக்குப் பின்னால் ஒளிய முற்பட்டு தோல்வியடைந்த நிலையில் தற்போது ஜே.வி.பி. க்குப் பின்னால் ஒளிய முயற்சித்துக்கொண்டிருக்கின்றார். சிங்கள ஊடகங்களுக்கு ஒரு கதையும் தமிழ் ஊடகங்களுக்கு ஒரு கதையும் அவர் சொல்லி மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி குழப்பத்தின் பிரதிநிதியாக இருக்கின்றாரே தவிர மக்களின் பிரதிநிதியாகச் செயற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20)


சாவகச்சேரியில்

# நகை திருட்டு; இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.29

சாவகச்சேரி பெரிய அரசடி பிரதேசத்தில் தனிமையிலிருந்த மூதாட்டியின் வீட்டில் நகை மற்றும் பணம் என்பவற்றைத் திருடிய சம்பவம் தொடர்பில் இரு சந்தேகநபர்களை சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மூதாட்டியொருவர் வீட்டில் தனித்திருந்தவேளை திருடர்கள் உள்நுழைந்து 12இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றனர் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்ததுடன் களவாடப்பட்ட நகையும் பணமும் மீட்கப்பட்டது. சந்தேகநபர்களை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ரி-28)



# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

*வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்*

யாழ்ப்பாணம், டிசெ. 29

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா தபால் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை புதிய அரசாங்கம் விடுவிக்கவேண்டும் என போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இதில் இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மதத் தலைவர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-18-110)

# போக்குவரத்துத் துறைக்கு ரூ.43 மில்லியன் நட்டம்!

கொழும்பு,டிசெ. 29

தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வமற்ற வகையில் இலவச பிரயாண அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 43 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அரச ஸ்தாபன விதிக்கோவையின் பிரகாரம் இரண்டு தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமே இலவச பிரயாண அனுமதிப்பத்திரங்கள் வழங்கலாம். ஆனால் 2023 ஆம் ஆண்டு 138 தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வமற்ற வகையில் இலவச பிரயாண அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தொடருந்து திணைக்களத்துக்கும் 25 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் கண்டறிந்துள்ளது. இந்தப் பணத்தை மீளப்பெறுமாறும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினர் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு உத்தரவிட்டுள்ளனர். (ச-22,6)

# மீன்பிடி வாடிகளை அகற்றக் காலக்கெடு

*பருத்தித்துறை மீனவர்கள் எதிர்ப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 29

மீன்பிடி வாடிகளை அகற்றுமாறு கரையோர பேண் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளமையானது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயலாகும். இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்தவேண்டும் என்று பருத்தித்துறை முனை மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.வடமராட்சி வடக்கு பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலர், ஆளுநர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரை சந்தித்து மனுவொன்றையும் கையளித்தனர்.

இலங்கை பூராகவும் கடற்கரையோரங்களில் மீனவர்களின் மீன்பிடிவாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலமே மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்தநிலையில் பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர்களின் கரையோர வாடிகளை மாத்திரம் அகற்றுமாறு கரையோர பேண் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது ஏன்? இதனால் எமது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிப்படையும். இந்தச் செயற்பாட்டை தடுக்கவேண்டும் என்றும் மீனவர்கள் குறிப்பிட்டனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளஇடர் தடுப்புக்கு யாழில் 21 திட்டங்கள்

## இடர் முகாமைத்துவ நிலையம் முன்மொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்.மாவட்டத்தில் வெள்ளஇடரைத் தடுக்கும் முகமாக 21 திட்ட முன்மொழிவுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பானாவெட்டி வீதியில் முதலாவது மதகிலிருந்து 2 ஆவது மதகுவரை வடிகால் அமைத்தல், இன்பச் சோலை கிராமத்துக்கான பாதை புனரமைப்பு, யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழிலூர் கிராமத்துக்கான உவர்நீர்த் தடுப்பணை அமைத்தல், கொட்டடி கற்குளம் வெள்ள வாய்க்கால் புனரமைப்பு, ராஜாலி குளத்திலிருந்து அராலி வீதியூடாக நாவாந்துறை வடக்கு கடற்பகுதிக்கு வெள்ள வாய்க்கால் புனரமைப்பு , வெள்ள வாய்க்கால் வசந்தபுர கடற்கரை வரை அமைத்தல், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் மடத்தடி வெள்ளவாய்க்கால் அமைத்தல், கொடிகாமம் நாவலடி வெள்ள வாய்க்கால் அமைத்தல், நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டத்துக்கு மண் நிரப்புதல், மட்டுவில் வடகிழக்கு எல்லை வெள்ள வாய்க்கால் அமைத்தல், சாம்பவேலி வெள்ள வாய்க்கால் அமைத்தல், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மதகு மற்றும் வடிகாலமைப்பு அமைத்தல், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குளவாய்க்கால் புனரமைப்பு, ஐந்து கண் வாய்க்கால் புனரமைப்பு , நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குருசு மதவடி வாய்க்கால் அமைத்தல் , அஞ்சுதன் குளத்திலிருந்து கோம்பயன் மணல் ஊடாக வடிகால் அமைத்தல், பண்டாரிக்குள பக்க சுவர் அமைத்தல், கருவேப்புலம் வீதியில் வெள்ள நீர்பிடிப்பு குழிகள் அமைத்தல், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய பகுதிக்கு மண் நிரப்புதல் , பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வல்வெட்டித்துறை திருவில் குளத்தை அகலப்படுத்தி ஆழமாக்குதல்,கொத்தியால் வீதி மற்றும் தடுப்பு சுவர் புனரமைப்பு , தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இளவாலை வடமேற்கு வடிகாலமைப்பு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நீர்வேலியிலிருந்து கோப்பாய் வரையுமான வெள்ளப் பாதுகாப்பு அணை புனரமைப்பு ஆகிய 21 திட்டங்களே முன்மொழிவுக்காக மாவட்ட செயலகத்திடம் சமர்ப்பிக்கபட்டுள்ளன. (ச-125)

### யாழ்.குடாநாட்டில்

# 2084 ஹெக்ரேயரில் வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம், டிசெ. 29

**யாழ்.குடாநாட்டில் பெரும்போகத்துக்கான சின்ன வெங்காயச் செய்கை விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

இம்முறை போகத்தின்போது இரண்டாயிரத்து 84 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இந்தச் சின்ன வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மழையின் தாக்கம் குறைந்ததையடுத்து சீரான கால நிலை நிலவுவதனால் சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

விதை வெங்காயத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் செய்கையாளர்கள் உண்மை விதைகளை பயன்படுத்தியும் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை குடாநாட்டில் சின்ன வெங்காயத்துக்கு கிராக்கி காணப்படுவதுடன் ஒரு கிலோ வெங்காயம் 350 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச-17)

# வவுனியா விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை இழப்பீடுகள்

வவுனியா, டிசெ. 29

வவுனியாவில் 1,387 ஏக்கர் நெற்செய்கைக் காணிக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கமநல அபிவிருத்தி நிலையங்களின் கீழ் செய்கைபண்ணப்பட்ட 3529.25 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

அழிவடைந்த நெற்காணிகள் தொடர்பாக கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள காப்புறுதிச்சபையின் உத்தியோகத்தர்களால் மதீப்பீடு செய்யும் பணிகள் அண்மைய நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தன

மதிப்பீட்டின் அடிப்படையில் ஒவ்வொரு ஏக்கருக்கும் தலா 14,400 ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-110)

# மணல் பதுக்கிய இருவர் கைது

கிளிநொச்சி, டிசெ. 29

உருத்திரபுரம் சிவநகர் பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனைகளின்போது நான்கு வீடுகளில் அனுமதிப்பத்திரமின்றி அளவுக்கு அதிகமான மணலைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இரு சந்தேகநபர்களை விசாரணையின் பின் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-25, 28)





# உதவிகள் வழங்கிவைப்பு

முல்லைத்தீவு, டிசெ. 29

முள்ளியவளை பகுதியில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட 8 குடும்பங்களுக்கு முள்ளியவளை அன்னை திரேசாம்பாள் ஆலயத்தில் வைத்து உலர் உணவுப் பொதிகளும் பணமும் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. நெதர்லாந்தில் வசிக்கும் கிளைமேன்ட் என்பவரின் நிதிப் பங்களிப்பில் ஈழம் நிசான் அறக்கட்டளையினரால் இவை வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ச-25, 19)

# யாழ். உணவகங்களில் திடீர்ச் சோதனைகள்

யாழ்ப்பாணம், டிசெ.29

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு யாழ். நகர்ப்பகுதியிலுள்ள 28 வரையிலான உணவகங்கள் சுகாதாரப் பிரிவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை சோதனையிடப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கைகளில் 11 உணவகங்கள் போதிய சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை இனம்காணப்பட்டதால் உடன் சீர்செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், நான்கு உணவு கையாளும் நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருள்கள் பழுதடைந்த உணவுப்பொருள்கள் என்பன கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ச-ரி-17)

# ஞானச்சுடர் இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.29

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் மார்கழி மாத 324 ஆவது இதழ் வெளியீடு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மூன்று மாணவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் 145,500 ரூபா பெறுமதியான மூன்று புதிய துவிச்சக்கரவண்டிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-33,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரிசி கையிருப்பு தாராளம் வெளிமாவட்ட அரிசி எதற்கு?

யாழ். வணிகர் கழகத் தலைவர் கேள்வி

கொழும்பு, டிசெ.29
உள்ளூர் உற்பத்தி அரிசி இனங்கள் போதிய அளவு கையிருப்பில் இருக்கின்றன. தென்னிலங்கை மாவட்டங்களிலிருந்து வடமாகாணத்துக்கு வரும் அரிசி எமக்கு அவசியமற்றது என்று யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ப.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட மொத்த சில்லறை அரிசி வியாபாரிகளுடன் விலை நிர்ணயக் கட்டுப்பாடு தொடர்பிலான கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வெளிமாவட்டங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட அரிசி மீண்டும் வடமாகாணத்துக்குக் கொண்டு வரப்படுவதாக அரசாங்கம் கூறுகின்றது.
உள்ளூர் மக்கள் பாவிக்கின்ற அரிசியை எந்த விதமான தட்டுப்பாடும் இன்றி கொள்வனவு செய்ய முடியும். வெளிமாவட்டங்களிலிருந்து வரும் வெள்ளைப் பச்சை, சம்பா இன அரிசிகள் எமக்கு அவசியமற்றது.
அத்துடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடையில் அரிசியினை ஏற்றி இறக்க போக்குவரத்து செலவீனங்கள் உள்ளிட்ட இலாபமாக 10 ரூபாவை எதிர்பார்க்கின்றனர். அந்தவகையில் வர்த்தக வாணிபத்துறை அமைச்சருடன் தொடர்புகொண்டபோது நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு இதுகுறித்து ஒரு கடிதத்தை அனுப்பி வைத்த பின்னர் அதன் பிரதியை தமக்கு அனுப்புமாறு கூறினார்- என்றார். (ச-45-27)

# தீவகத்தில் தொடரும் பசுக்கொலைகள்!

கிணறுகளில் மிதக்கும் எச்சங்கள்; அதிகாரிகள் அசமந்தம்




யாழ்ப்பாணம், டிசெ. 29
**தீவகம் வேலணைப் பகுதிகளில் களவாகப் பிடிக்கப்படும் பசு மாடுகள் இறைச்சியாக்கப்படும் சமூக விரோதச் செயல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

களவாடப்படும் பசுக்களை இறைச்சியாக்கிவிட்டு அதன் எச்சங்களை விவசாயக் கிணறுகளிலும் நீர்நிலைகளிலும் வீசிவிட்டுச் செல்கின்றனர். இந்தப் பசுக்கள் சினைப்பட்ட நிலையிலேயே அவை இறைச்சியாக்கப்படுகின்றன. இவ்வாறான செயல்களால் வளர்க்கப்படும் பெரிய கலப்பின பசுக்கள் கொல்லப்படுவதுடன் எமது வாழ்வாதாரமும் சிதைக்கப்படுகின்றது. முன்னர் மண்டைதீவில் பொலிஸ் காவலரண் இருந்தபோதே மாடுகள் கடத்தப்பட்டநிலையில் தற்போது காவலரண்களும் இல்லாமையால் நாளாந்தம் யாழ். நகருக்கு வாகனங்களில் களவாக வெட்டப்பட்ட மாட்டிறைச்சி கொண்டு செல்லப்படுகின்றது. எனவே இந்த சமூக விரோத செயலான பசுக்கொலைகளை தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுத்து எமது வாழ்வாதாரத்தை காக்கவேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)


## வயோதிபர் மீது தாக்குதல்!

முல்லைத்தீவு, டிசெ. 29
மாடு மேய்க்கச் சென்ற வயோதிபர் மீது நபரொருவர் தாக்குதல் நடத்தியுள்ளார் என முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.
முள்ளியவளை புதறிகுடாப் பகுதியில் தனது கால்நடைகளை மேய்ச்சலுக்காக விட்டுவிட்டு அவற்றைப் பட்டிக்குக் கொண்டுவருவதற்காக மாடுகளைப் பார்க்கச் சென்றபோதே மோட்டார் சைக்கிள் வந்த ஒருவர் குறித்த பகுதியில் நிற்கவேண்டாம் எனத் தெரிவித்து தாக்கியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலில் அடிகாயங்களுக்கு உள்ளான 73 வயதுடைய வயோதிபர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். முள்ளியவளை பொலிஸார்இதுதொடர்பில்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)



## கிளிநொச்சி மருத்துவமனையில் தே.ம. சக்தி. எம்.பிக்கள் ஆராய்வு

கிளிநொச்சி, டிசெ.29
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவக் கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா மற்றும் ஜெ. றஜீவன் ஆகியோர் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைக்கு கடந்த வியாழக்கிழமை சென்று புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறப்பு சிகிச்சை நிலையத்தைப் பார்வையிட்டனர். இதன்போது மருத்துவமனையின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்கத் தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவது மற்றும் ஆளணி எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.
கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன் மற்றும் கிளிநொச்சி பொது மருத்துவமனைப் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-27)



## சிற்பக் கலைஞர் நினைவுகூரலும் ஆழிப்பேரலை நினைவேந்தலும்

யாழ்ப்பாணம், டிசெ.29
சுனாமிப்பேரலையின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, தெல்லிப்பழை முதியோர் சங்கத்தின் செயலாளர் வி. தனராஜ் தலைமையில் தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் அமைந்துள்ள சிற்பாலயம் கலைக்கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தனின் கைவண்ணத்தில் உருவான வரலாற்றுப் பதிவான சுனாமிச் சிற்பத்தின் முன்பாக நடைபெற்ற நிகழ்வில், சுனாமியால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்ததோடு, தொடர்ந்து மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி. ஆனந்தனின் உருவப்படத்துக்கும் மாலை அணிவித்து நினைவுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-25.66)

## ஏ–9 வீதியில் குழிகள்; விழுந்தெழும்பும் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.29
ஏ-9 வீதியில் எழுதுமட்டுவாளுக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் மிகப்பெரிய குழிகள் மழைக்குப் பின்னர் தோன்றியுள்ளன.
இதனால் வாகனங்களைச் ஓட்டிச்செல்லும் சாரதிகள் குண்டு குழிகளுக்குள் விழுந்தெழும்பி பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்துச்செய்ய வேண்டியுள்ளது.
குறித்த பள்ளங்களால் விபத்துகளும் ஏற்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு குறித்த குழிகளை நிரவி சீர்செய்யவேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-45-27.9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மேஷராசி அன்பர்களே! சின்னச் சின்னக் குழப்பம் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது பதற்றம் வேண்டாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** ரிஷபராசி அன்பர்களே! உற்சாகமான நாள். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு ஏற்படக்கூடும். கணவன் -- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மிதுனராசி அன்பர்களே! புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படும். உறவினர்கள் வருகையால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும்.

**கடகம்:** கடகராசி அன்பர்களே! உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தெய்வ பக்தி அதிகரிக்கும். கோயில்களுக்குச் சென்று குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது.

**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதரர் குடும்பம் தொடர்பான முக்கியமான விடயத்தில் உங்கள் ஆலோசனையைக் கேட்பார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! மனதில் தைரியம் அதிகரிக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்து பேசுவார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** துலாராசி அன்பர்களே! அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தை வழி உறவினர்களால் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**விருச்சிகம்:** விருச்சிகராசி அன்பர்களே! உற்சாகமான நாளாக அமையும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம்.

**தனுசு:** தனுசுராசி அன்பர்களே! தேவையான பணம் கையில் இருந்தாலும், திடீர்ச்செலவுகளால் மனதில் சற்றுச் சோர்வு உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்த்து விடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** மகரராசி அன்பர்களே! வாழ்க்கைத்துணையால் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும், ஆடை, ஆபரணச் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** கும்பராசி அன்பர்களே! மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பரபரப்புடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** மீனராசி அன்பர்களே! இன்று மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடவும். ஆனால், எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். உறவினர்களால் நன்மை உண்டாகும்.

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.29

கவிஞரும், ஆய்வாளரும், சங்கீத விற்பன்னருமான கலா பூஷணம் சி.சிவானந்தராஜாவின் 'நவாலியூர் க.சோமசுந்தரப் புலவரும் அவர் இயற்றிய பிரபந்தங்களும்' என்ற நூல் வெளியீட்டு விழா ஓய்வுநிலை கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும், ஆய்வாளருமான கலாநிதி ந.இரவீந்திரன் தலைமையில் பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையினை ஆசுகவி செ.சிவசுப்பிரமணியமும், வாழ்த்துரையினை சிரேஷ்ட சட்டத்தரணி சோ. தேவராஜாவும், நூல் அறிமுக உரையினை மன்னார் அகத்திமுறிப்பு மு.த.க.பாடசாலை அதிபர் த. சுதனும், பதிலுரையினை நூலாசிரியர் கலாபூஷணம் சி.சிவானந்தராஜாவும் ஆற்றவுள்ளனர்.

நிகழ்வில் கலாபூஷணம் சி.சிவானந்தராஜாவின் கலை இலக்கிய வரலாற்று ஆவணங்கள், படைப்புகளின் கண்காட்சியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-45)





# யாழ்.மாவட்டத்தில் சிறப்புற்ற பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பு இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை மாவட்ட செயலாளர் செல்லையா பத்மநாதன் ,சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஷ், ஓய்வு நிலை அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளரும் பண்பாட்டலுவல்கள் ஆடற்கலை ஆற்றுகையாளருமான கலைஞர் வேல். ஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது விசேட கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கலைஞர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய 'ஈழத்தின் வடபுலம் வரலாற்றுக்கு முன்னும் பின்னும்' எனும் தொனிப்பொருளிலான 'யாழ்ப்பாணம் 3 நூல்' வெளியீடும் இடம்பெற்றது. அத்துடன் யாழ். மாவட்டத்தின் கலைத்துறையில் பல்வேறுபட்ட பிரிவுகளில் தமது கலைப் பயணத்தை நீண்டகாலம் தொடரும் கலைஞர்களுக்கு 'யாழ் முத்து' விருதும் , இளம் கலைஞர்களுக்கு 'இளம் கலைஞர்' விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ச- 25, 125)

# மார்கழி இசை விழா இறுதி நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ்.வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மார்கழி இசைவிழாவின் 3 ஆம் நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பி.ப 5.10 க்கு இந்தியன் கோர்னர் இசைப்பிரிவு மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தும், பி.ப. 5.20 க்கு இந்தியத் துணைத்தூதுவர் சாயி முரளியின் திருநிறை வழங்கலும், பி.ப. 5.30 க்கு திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் நெறியாள்கையில் இந்தியத் துணைத்தூதரக இசைத்துறை மாணவர்களின் "மதுர கானங்கள்" நிகழ்வும், பி.ப. 5.45 க்கு யாழ். மண்ணில் புகழ் பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைச் சங்கமமும், பி.ப. 6.45 க்கு யாழ். பல்கழைக்கழக இசைத்துறை மாணவர்களின் தமிழ் இசை அரங்கும் இரவு 7.15 க்கு நர்த்தனஷேத்ரா நடனப்பள்ளி மாணவர்களின் "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" நாட்டிய நாடக நிகழ்வும் இரவு 7.45 க்கு இந்திய புல்லாங்குழல் வித்துவான் ஸ்ரீதரின் "புல்லாங்குழல் இசையும் , இரவு 8.45 க்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தயாரிப்பில் "அகலிகை சாப விமோசனம்" நாட்டிய நாடகமும் நடைபெறவுள்ளன. (ச-25-10)

# புதிய வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், புராணபடனம், கதாப்பிரசங்கம், சமஸ்கிருதம் ஆகியவற்றுக்கான ஆறுமாத காலப் பயிற்சி வகுப்புகள்(புதியபிரிவு) ஆரம்பமாகவுள்ளன.

இந்த வகுப்புகள் சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

இணைய விரும்புவோர், கற்க விரும்பும் பாடம், முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அடையாள அட்டை இலக்கம் , கல்வித்தகைமை போன்ற விவரங்கள் உள்ளடக்கிய படிவத்தை இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களம், வடபிராந்திய அலுவலகம், குருகுலம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பு சமர்ப்பிக்கலாம் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அனிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-25)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.29

'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பாளுக்குப் பூசை வழிபாடுகள் நடைபெற்றுத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறுமென ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. நா.சிவசங்கரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-45-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## பிக்குகளுக்கு வாய்ப்பூட்டு இல்லையா?

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கும் விளக்குமாறை எடுத்துக்காட்டியிருக்கின்றார் சீலரத்ன தேரர். நாணயநிதியத்துடனான ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு நீக்கம் உள்ளிட்ட பல்வேறுவிடயங்கள் தொடர்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே, அரசுக்கு விளக்குமாறு எச்சரிக்கையை சீலரத்ன தேரர் விடுத்துள்ளார். இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க தேரர்கள் எத்தனிப்பது இதுவொன்றும் முதல்முறையல்ல. ஆனால், இவ்வாறான எச்சரிக்கைகளும், பொதுவெளிச் செயற்பாடுகளும் ஏற்படுத்தக்கூடிய எதிர்மறைத் தாக்கம் தொடர்பில் அவர்கள் சிந்திக்கவேண்டும். தமது கருத்துகள் ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான விளைவுகள் தொடர்பான தெளிவான புரிதல் அவர்களுக்கு இருக்க வேண்டும்.

இலங்கை இன்று பொருளாதாரத்தில் மீண்டெழுகின்றது என்றால், அதற்கு சர்வதேச நாணயநிதியம் வழங்கிய நிதியாதரவு பிரதான காரணம் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. முன்பிருந்தரணில் அரசாங்கமாக இருக்கட்டும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாக இருக்கட்டும், இந்த இரண்டு அரசாங்கங்களிலும் பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியாக இருக்கட்டும், அனைத்துத் தரப்புகளும் இலங்கைக்கு நாணயநிதியத்தின் உதவிகள் அவசியம் தேவை என்பதில் ஒன்றித்திருக்கின்றன. அத்துடன், பொருளாதார நிபுணர்கள் பலரும் நாணயநிதியத்தின் அவசியத்தனத்தை ஆதாரபூர்வமாக எண்பித்திருக்கின்றனர். இவ்வாறிருக்கையில், முற்றும் துறந்தவர்களான பிக்குகள், 'முற்றும் அறிந்தவர்கள்' போல கருத்துகளை வெளிப்படுத்தி மக்களைக் குழப்புதல் ஆகாது.

நாணயநிதியத்தின் மூன்றாம்கட்ட கடன் விடுவிப்பு இன்னமும் முழுமைப்படுத்தப்படவில்லை. நாணயநிதியத்தின் பணியாளர்களுக்கும், இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பணியாளர்மட்ட ஒப்பந்தமே எட்டப்பட்டிருக்கின்றது. அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கைக்குக் கடன்வழங்குவதா இல்லையா என்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை சர்வதேச நாணயநிதியத்தின் நிதிச்சபை விரைவில் மேற்கொள்ளவுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில், சீலரத்ன தேரர் வெளிப்படுத்தியிருக்கும் அபாய உடல்மொழி தனது நிதியின் மீள்வருகை மற்றும் தவணைகள் தொடர்பில் நாணயநிதியம் சிந்திப்பதற்கும் மறுபரிசீலனைகளை மேற்கொள்வதற்கும் வழிவகைகளை ஏற்படுத்தவே செய்யும். எனவே, ஒரு மீளெழுச்சி - சீரமைப்பு முன்னெடுக்கப்படுகையில், சீலரத்ன தேரர் போன்ற தரப்பினர் நாட்டுக்கு மென்மேலும் அழுத்தங்களையும் சுமைகளையும் ஏற்றுகின்றனரே அன்றி, அவற்றைக் குறைப்பதற்கு முன்வருபவர்களாக இருந்ததாக வரலாறு இல்லை.

தனிச்சிங்களச் சட்டம் முதல் 13ஆவது திருத்தம் வரை, தேரர்களின் அவசர அறிவிப்புகள் மற்றும் தலையீடுகள் தமிழர்களைப் பல இடங்களில் வஞ்சித்திருக்கின்றன. அத்தகைய வெற்றுக் கூச்சல்களை எழுப்பியவர்களும், அவற்றை தம் அரசியல் ஆதாயமாகவும் வாக்குகளாகவும் மாற்றியவர்களும் இன்று முகவரியற்றவர்களாக மாறியுள்ள நிலையில், நாணயநிதியம், பாதுகாப்புச் சீரமைப்பு உள்ளிட்ட புதிய விடயங்களை வலிந்து பிரச்சினைகளாக்க வேண்டிய தேவை இவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இவர்களைப் போன்ற ஒரு சில பிக்குகளால், எல்லாப் பிக்குகளுக்குமே களங்கம் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாது. எனவே நாட்டினைக் குழப்பும் இவர்களைப் போன்ற பிக்குகளின் வாய்களுக்குப் பூட்டுப்போட பௌத்த மகாசங்கங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் நாட்டை அழிவுக்குள் தள்ளிய பாவத்தின் பெரும்பங்கு பௌத்த மகாசங்கங்களைச் சார்ந்துவிடும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


**நாளொரு நல்வார்த்தை**

தலைக்கனம் என்பது இரண்டு வகை. தன்னைப் பெரிதாக நினைப்பது. முதல் வகை. தலைக்கனமுள்ள பிறரைத் தாழ்வாக நினைப்பது இரண்டாம் வகை.

– ஐன்ஸ்டின் –




விலங்குகளால் பயிரழிவு

## இரண்டு வருடங்களில் ரூ. 55.3 பில்லியன் நட்டம்

கொழும்பு, டிசெ.29

**2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விலங்குகளின் தாக்கத்தால் பயிர்ச்செய்கைக்கு 55.3 பில்லியன் ரூபா பெறுமதியான இழப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

காட்டு விலங்குகள் சுமார் 86.7 மில்லியன் தேங்காய்களை அழித்துள்ளன. இதன் மதிப்பு 5.2 பில்லியன் ரூபாவாக கணிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நெற்செய்கையில், 25சதவீதமும் சோளச்செய்கையில் 11 சதவீதம் மற்றும் காய்கறிகளில் 7சதவீதம் சேதமாக்கப்பட்டுள்ளன.

காட்டுப்பன்றிகள் மற்றும் குரங்குகள் உள்ளிட்ட விலங்குகளால் ஒட்டுமொத்தமாக 59.7 மில்லியன் கிலோ காய்கறிகள் அழிவடைந்ததுடன் 4.5 பில்லியன் ரூபா இழப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

இதனால் ஊவா மாகாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு அங்கு 45,000 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்ட பயிர்களை அழித்துள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## செலவறிக்கை சமர்ப்பிக்காத வேட்பாளர்களிடம் விசாரணை

கொழும்பு,டிசெ.29

நாடாளுமன்றத்தேர்தல் தொடர்பான செலவறிக்கைகளை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மானதுங்க தெரிவித்துள்ளார். அந்தந்த மாகாணங்களின் உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் கலந்தாலோசித்து இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (ச-இ)

## மூன்று மாதங்களில் 28 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு,டிசெ.29

கடந்த மூன்று மாதங்களில் 28 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 16 சம்பவங்கள் பாதாள உலகக் குழுக்களால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மானதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக 57 சந்தேகநபர்கள் துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-22,6)

## 381 கடைகள் சிக்கின

கொழும்பு,டிசெ.29


பண்டிகைக் காலத்தின் போது, மனித பாவனைக்குத் தகுதியற்ற உணவுகளை விற்பனை செய்த 381 கடைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாத நடுப்பகுதி வரை, விசேடசுற்றிவளைப்புகள் தொடரும் என அதன் செயலாளர் தெரிவித்தார். (ச-இ)

## 300 தொன் அரிசி நாளாந்தம் சந்தைக்கு

கொழும்பு,டிசெ.29

சதொச விற்பனை நிலையங்கள் மூலம் நாளாந்தம் 300 மெற்றிக் தொன் அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாக லங்கா சதொச லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவர் சமித்த பெரேரா தெரிவித்துள்ளார். இவ்வாறு விநியோகிக்கப்படும் அரிசி அரசு கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரிதான மாணிக்கக்கல் இலங்கையில் கண்டுபிடிப்பு

கொழும்பு,டிசெ.29

உலகில் மிகவும் அரிதான மாணிக்கக் கல்லொன்று இலங்கையில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இரத்தினபுரி - இறக்கு வானைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்ட மாணிக்கக் கல் அகழ்வு ஆராய்ச்சி யின் போதே இந்த அரிதான மாணிக்கக் கல் கண்டறியப்பட்டுள்ளது. இதன்போது கண்டுபிடிக்கப்பட்ட கல்லானது ஸ்கோட் போலைட் கெட்ஸ் ஐ சன்ஸ் ஸ்டோன் சூரியக்கல் என ஆராய்ச்சியாளர்கள் தெரி வித்துள்ளனர். இந்தக் கல் வெகுவிரை வில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

பதவிவிலகல் தொடர்பில்

## மறுபரிசீலனைக்கு வாய்ப்பு இருந்தும் மாவை அதைப் பயன்படுத்தவில்லை

### தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 29

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவ தாக மாவை சேனாதிராஜா அறிவித்த பின்னர், அவர் தனது முடிவை மறுபரிசீலனை செய்வதற்காக போதிய அவகாசம் இருந்தது. எனினும், அவர் எந்தவொரு தெளிவுபடுத்தலையும் வழங்கவில்லை என்று தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் ஜனா திபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருவர் தனது பதவியில் இருந்து விலகுவதற்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. எனவே, மாவை சேனாதிராஜா தனது பத வியில் இருந்து விலகுவதற்கும் அவ ருக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் அவர் பதவியில் இருந்து விலகினார்.

அதன்பின்னர் மாவை சேனாதிராஜா தனது முடிவை மறுபரிசீலனை செய்யும் வகையில் அவருக்குப் போதிய அவகாசம் வழங்கியிருந்தோம். எனினும், தன்னு டைய நிலைப்பாட்டில் மாற்றம் இருப்ப தாக அவர் வாய்மொழி ஊடகவோ எழுத்து மூலமாகவோ அறிவிக்கவில்லை. எனவே அதன் பின்னரே கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத் துள்ளது.

கட்சியின் யாப்பின் பிரகாரம் ஒரு பதவி வெற்றிடமானால் அதனை நிரப்பவேண் டிய பொறுப்பும் கடமையும் அதிகாரமும் மத்திய செயற்குழுவுக்கே உள்ளது. அந்த அதிகாரத்தின் அடிப்படையில்தான் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

கட்சியின் 75ஆவது வருட நிறைவை முன்னிட்டு, பவள விழாவாக அதனைக் கொண்டாடுவதற்கு மாவட்டம் தோறும் நினைவுக் கூட்டங்களை நடத்தத் தீர்மா னித்துள்ளோம். மட்டக்களப்பில் பிரதான விழா முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-110)

## வங்கிக் கடன்களுக்கு காலஅவகாச சலுகை

கொழும்பு,டிசெ.29

25 மில்லியன் ரூபாவுக்குக் குறைவான கடனைப் பெறுபவர்களில் 99 வீதமா னோர் வங்கிகளுடன் தங்கள் கடனைப் பற்றி மீண்டும் பேச்சு நடத்தி பணம் செலுத்தும் திட்டத்தை மேற்கொள்வதற்கு 12 மாத கால அவகாசத்தை அரசாங்கம் வழங்கியுள்ளது. அதன்படி 25 முதல் 50 மில்லியன் ரூபா வரையிலான கட னாளிகளுக்கு 9 மாத கால நீடிப்பும், ஏனைய கடனாளிகளுக்கு 6 மாத கால நீடிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயலூக்கமான பங்க ளிப்பை உறுதி செய்வதே நோக்கம் என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 65 ரூபா.
நிலம் இழுத்துப் பதிக்க - 90 ரூபா.
077 334 1281

மலிவு விற்பனை
வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில் விற்பனைக்கு.
077 724 2427, 077 741 2713

திருமண சேவை
எம்மிடம் அரச, தனியார், உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன.
தொடர்புக்கு: 076 210 2815

காணி விற்பனைக்கு
யாழ் அரியாலைப் பகுதியில் சேவிஸ் ஸ்ரேசன், பாரிய களஞ்சிய சாலை மற்றும் கட்டடங்கள் அமைக்க கூடிய A9 க்கு அருகாமையில் காணிகள் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
077 666 5628

சாரதி தேவை
யாழினை தளமாகக் கொண்டு இயங்கும் அப்பியாச புத்தகங்கள் விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றுக்கு லொறிச், சாரதி தேவை.
தொடர்புகளுக்கு:
076 998 0693, 011 282 9642
(CS 2130) V-1


வாடகைக்கு தேவை
மானிப்பாய், சுன்னாகம் ஆகிய நகரங்களில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட விசாலமான வீடு அல்லது கட்டடம் ஒன்று நிறுவனம் ஒன்றை நடத்துவதற்கு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
077 769 5605, 077 690 3287

கடை வாடகைக்கு
பருத்தித்துறைக்கு அண்மையில் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் நான்கு முகப்புக்களை கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
➤ Super Market அமைப்பதற்கு மிகப் பொருத்தமான இடம்.
➤ மொத்தப் பரப்பு - 1400 சதுர அடி
தொடர்பு:- 071 389 4689
(CS/28750) J-1

வேலையாட்கள் தேவை
யாழில் இயங்கும் ஏற்றுமதி செய்யும் நிறுவனம் ஒன்றின் தொழிற்சாலைக்கு:
மேற்பார்வையாளர் (Supervisor) கான நான்கு (04) வெற்றிடங்கள் உள்ளன.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொலைபேசி இலக்கம்:
077 711 1999
(CS 2135) A-1

காணிகள் விற்பனைக்கு உண்டு
கல்வியங்காடு கட்டப்பிராய் சந்திக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும், நாவற்குழி சந்திக்கு அண்மையில் 4 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு: Whats App:
076 193 3490, 077 084 0453
(CS 2129) V-1

புதுவருடத்தை முன்னிட்டு
Florance Nursing Home Care Service Centre
புளோரன்ஸ் நேர்சிங் ஹோம்கேர் சர்வீஸ் சென்டர்



உங்கள் தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக வீட்டில் வைத்து பராமரிக்க முடியாதவர்கள் பாரிசவாதமுடையவர்கள் மற்றும் நீண்டகால படுக்கை நோயாளிகள் அனைவரையும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மிக பாதுகாப்பாகவும் நாங்கள் பார்த்துக்கொள்வோம்.
- உணவு முறைகள் மிக ஆரோக்கியமாக வழங்கப்படும்
- முதியோர்களின் மனநிலையறிந்து / உடல் நிலையறிந்து பொழுது போக்கான விடயங்கள் / உடற்பயிற்சி / பிசியோ தெரபி / மன அமைதிக்கான தியானங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெறும்.
- முதியோர்களின் ஆரோக்கியம் கருதி மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் மாதாந்த கிளினிக் மருத்துவ சேவைகள் என்பன வழங்கப்படும்
- அவர்களின் வீடுகளில் இருப்பதுபோலவே மகிழ்சியாகவும் அன்பாகவும் எமது தாதியர்களின் மேற்பார்வையிலும் உதவித் தாதியர்களின் பராமரிப்பிலும் பாது காக்கப்படுவார்கள்.
மிகக் குறைந்த கட்டணத்தில் சிறந்த நிறைவான சேவையை வழங்குகின்றோம்
அனுமதிகளை பெற்றுக்கொள்ள
077 718 6438 / 077 482 4473
முகவரி : மருதனார்மடம், உடுவில்.

A/L பரீட்சையின் பின்னர்....
யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..
Diploma in Spoken English
◉ முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
◉ மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கும், Listening, Reading & Writing இல் தேர்ச்சியடைவதற்கும் 100% உத்தரவாதம்.
◉ மாணவர்களின் ஆங்கிலறிவுற்கேற்ப பாடநெறிகள் Basic, Intermediate & Advanced எனத் தனியாக நடைபெறும்.
BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294
IDP IELTS, Ukvi Exam centre

JAFFNA DISTRICT CHESS ASSOCIATION (JDCA)
யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்
விஷேட கூட்டம்
யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்
யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனமானது தனது எதிர்கால நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லவும் ஆக்கபூர்வமாக சதுரங்கத்தை வளர்ச்சிபாதையில் இட்டு செல்வதற்குமான கலந்துரையாடல் ஒன்று ஒழுங்குபடுத்தியுள்ளது. இதில் சதுரங்கத்தில் ஆர்வமுள்ளவர்கள் சதுரங்க வீரர்கள் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களின் ஆக்க பூர்வமான கருத்துக் களை பகிர்ந்து கொள்ளலாம்.
இடம் :- பஞ்சலிங்கம் மண்டபம், கொக்குவில் இந்துக் கல்லூரி
காலம்: 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி
குறிப்பு :- அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள விரும்புவர்கள் அங்கத்துவ விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க முடியும்.
தலைவர்
(CS/2130) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகதிகளுக்கு புகலிடமளியுங்கள்

## சிவில் சமூக அமைப்புகள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு,டிசெ.29
பிராந்தியத்தில் நடந்து வரும் மனிதாபிமான நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் புகலிடம் கோருவோரை நிராகரிக்கக்கூடாது என்று 50 சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக வலியுறுத்தி அரசாங்கத்துக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளன.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவரகம் இலங்கையில் உள்ள தனது அலுவலகத்தை மூடவுள்ளதாக அறிவித்துள்ள நிலையிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு சிவில் அமைப்புகள் கூட்டாக கடிதமொன்றை அனுப்பியுள்ளன.

அதில், இலங்கைக்கு கடந்த வாரம் வருகைதந்த 100க்கும் மேற்பட்ட ரோஹிங்கிய அகதிகள் உட்பட, நாட்டில் ஏற்கனவே உள்ள அகதிகளின் பாதுகாப்பையும் ஆதரவையும், சர்வதேச சட்டத்தின்படி உறுதி செய்ய வேண்டும்.

புகலிடம் கோருவோர் மற்றும் அகதிகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும், நிரந்தர மீள்குடியேற்றம் உள்ளிட்ட நீண்டகாலத் தீர்வுகளைக் கண்டறிவதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



# பேக்கரி உணவுகள் விலை குறையாது

கொழும்பு,டிசெ.29
சந்தையில் முட்டையின் விலை குறைவடைந்துள்ள போதிலும் முட்டை சார்ந்த வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைக்கமுடியாது என்று வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வெதுப்பக உற்பத்திகளின் விலை குறைக்கப்படவேண்டுமாயின் கோதுமை மா மற்றும் வெண்ணெய் என்பவற்றின் விலையும் குறைவடையவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# நேபாளம் செல்கிறார் ரணில்



கொழும்பு,டிசெ.29
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நேபாளம் சென்றுள்ளார்.

அவர் தனது தனிப்பட்ட பயணமாக நேபாளம் வருகை தருகின்றார் என அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தின் பேச்சாளர் கிருஸ்ண பிரசாத் தகால் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த நிலையில் அங்கிருந்து அவர் நேபாளம் சென்று எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி நாடு திரும்பவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## குற்றச்செயல்களைத் தடுக்க

# குற்றத்தடுப்புக்குழு

கொழும்பு, டிசெ.29
நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்காக, பதில் பொலிஸ்மா அதிபர் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புக் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவர்களாக மேல் மற்றும் தென் மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் செயற்படுவார்கள்.

20 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட இந்தக் குழுவில் பொலிஸ் விசேட அதிரடிப் படைத் தளபதி, விசேட பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான டி.ஐ.ஜி., குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பொறுப்பான டி.ஐ.ஜி. மற்றும் 10 டி.ஐ.ஜி.க்கள் இடம்பெற்றுள்ளனர். (ச-இ)



# கழன்றது சில்லு பஸ் – பட்டா விபத்து!

யாழ்ப்பாணம், டிசெ. 29
இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ்ஸின், ஒருபக்கமுன் சில்லு கழன்று ஓடியதால், அருகில் சென்ற பட்டாரக வாகனம் விபத்துக்குள்ளான சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை சென்ற பஸ்ஸே, இவ்வாறு இயக்கச்சி இராணுவ முகாம் முன்பாக விபத்துக்குள்ளாகியது. பஸ்ஸின் முன் பக்கச் சில்லின் அச்சு உடைந்து கழன்று சென்றதில், அருகில் பயணித்த பட்டா வாகனத்தின் மீது பஸ்ஸின் சில்லு மோதியதில் பட்டா வாகனமும் நிலைகுலைந்து விபத்துக்குள்ளாகியது.

பஸ் சாரதியின் சாமர்த்தியத்தால், பஸ் குடை சாயமால் நிறுத்தப்பட்டதில் சேதங்கள் தடுக்கப்பட்டன. (ச-இ)

# சீனாவுக்கு கறுவாப்பட்டை

கொழும்பு,டிசெ.29
2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சீனாவுக்கும் கறுவா ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக கறுவா அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில், கறுவா ஏற்றுமதி தொடர்பில் சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார். (ச-இ)

# பயனாளர் கணக்கில் அஸ்வெசும நிலுவை

அஸ்வெசும கொடுப்பனவைப் பெறுவோருக்கு செலுத்தப்படவேண்டிய நிலுவைத்தொகையை அவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

ஆயிரத்து 314 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை நிலுவைத் தொகையாக வைப்பிலிடவுள்ளதாக சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 10 . 1960



மறைவு
26 . 12 . 2024

## அப்புத்துரை சிவசுப்பிரமணியம்

தச்சன் தோப்பு வேலம்பிராயைப் பிறப்பிடமாகவும் தாவளை இயற்றாலை கொடிகாமத்தை தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை சிவசுப்பிரமணியம் கடந்த (26.12.2024) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - இரத்தினேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ரதியின் (கனடா) அன்புக் கணவரும், வைஸ்ணவியின் அருமைத் தந்தையும், கயூரனின் (கனடா) அன்பு மாமனாரும், சாயிசனின் (கனடா) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2024) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றையதினம் தில்லையம்பலம் இரத்தினேஸ்வரியின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர்கள்
தி. விஜயரட்ணம் - 077 006 0641
தி. விஜயகுமார் - 076 303 8492
தி. மனோகரன் (ராசன் - பிரான்ஸ்)
தி.தியாகராஜா (ரூபன் - சுவிஸ்)

தாவளை இயற்றாலை,
மந்துவில்,
கொடிகாமம்.

(CS 57072) N-1

## ஹெரோய்னுடன் பெண் கைது

ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியில் 5 ஆயிரத்து 830 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஆயிரத்து எழுபது மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26)

ஐரோப்பா நாட்டில் வேலை

ஐரோப்பிய நாடான செலோவாக்கியாவில் பெண்களுக்கான உடன் வேலை வாய்ப்பு 400.000/= மேல் ஊதியம். உணவு பொதியிடல், தங்குமிடம், உணவு, Free மற்றும் பல்கேரியா, ஹங்கேரி வேலைவாய்ப்பு உள்ளது. லண்டன், பிரான்ஸ் மூன்று கிழமையில் பயணம். உங்கள் வெளிநாட்டு பிரயாண விசா பாஸ்போட் ஆவணங்கள் அனைத்திற்கும்

MK Visa World (PVT) Ltd. Station Road Vavuniya
Whatsaap: 074 035 2940

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..

மேற்கத்தைய நாடுகளில் கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

IELTS Academic / General / Ukvi

- மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

◎ IELTS, IELTS Ukvi பரீட்சைகள் British College இல் நடைபெறும்.
◎ முழுநேர வகுப்புக்கள் மற்றும் பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294

IDP IELTS, Ukvi Exam centre

## ஒன்றுகூடல்

யாழ்., டிசெ. 29

விதையனைத்தும் விருட்சமே குழுமத்தின் ஆண்டிறுதி ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)

## ஒளிவிழா

யாழ்., டிசெ. 29

நயினாதீவு புனித அந்தோனியார் ஆலய ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மேற்படி ஆலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அருட்பணி பி.ஜோன் றெக்சன் அடிகளார், சமூக சேவகர் திருமதி செல்வகுமார் இராஜேஸ்வரி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-66)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.06.1971

மறைவு
10.01.2024

## பொன்னையா சிறிபவன்


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஆண்டு ஒன்று சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

சிறுவிளான்
இளவாலை.

குடும்பத்தினர்
078 646 3610

(cs 57068) (N-1)

# மரண அறிவித்தல்



## செல்லம்மா தேவநாதன் (பூமணி)

(ஓய்வுநிலை நெசவு ஆசிரியர்)

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா தேவநாதன் நேற்று (28.12.2024) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆறுமுகம் நாகம்மாவின் அன்பு மகளும், மட்டக்களப்பு கிரான் பகுதியைச் சேர்ந்த திரு.திருமதி துரைச்சாமியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தேவநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆ.இராசரெத்தினம் (வைத்தியர்), ஆ.கனகரெத்தினம் (ஓய்வுநிலை ஆசிரியர்), சி.பரிமளம், அ.நாகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெறாமக்கள்
077 036 5903
077 167 7871

71/16, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(cs 57067) (N-1)



## பூநகரிப் பிரதேசத்தில் உணவகங்கள் சோதனை

கிளிநொச்சி, டிசெ. 29

பூநகரிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள உணவகங்களில் அண்மையில் திடீர்ப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது 43 உணவகங்கள் சோதனையிடப்பட்ட நிலையில் உணவுச் சட்ட விதிகளை மீறி வைத்திருந்த பழுதடைந்த உணவுகள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன் பல உணவகங்களில் காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, சுகாதாரச் சீர்கேடு மற்றும் சுகாதாரமற்ற உணவுகளைக் கையாண்டமை என்பவற்றுக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவு கையாளும் நிலையமொன்று சீல் வைத்து மூடப்பட்டதுடன் மற்றொரு உணவகத்தின் உரிமையாளருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1991 இல் 7 இல் சூரியன் செவ்வாய் உள்ள சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. 1987 இல் 12 இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: **076 583 0277**

## பணியாளர்கள் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு பெண் பணியாளர்கள் தேவை-கச்சான் அலுவா போடத் தெரிந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(CS 2146) V-1

**076 583 0277**




# சுற்றுலாவில் அதிக வருமானம் பூநகரிப் பிரதேசசபைக்கு விருது

யாழ்ப்பாணம், டிசெ.29

வடமாகாணத்தின் உள்ளூராட்சிச்சபைகளில் சுற்றுலாவில் அதிக வருமானத்தை ஈட்டியமைக்காக பூநகரிப் பிரதேசசபைக்கு வடக்கின் உள்ளூராட்சிச்சபைக்கான சுற்றுலாத்துறை விருது நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தினால் இடம்பெற்ற நூல் மற்றும் காணொலி வெளியீட்டு நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவனால் பூநகரி பிரதேசசபையின் செயலாளர் இரத்தினம் தயாபரனுக்கு விருது வழங்கி வைக்கப்பட்டது. (ச-125)

.யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி
மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..

திருமணம் முடித்து Family வீசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

IELTS LIFE SKILLS A1 UK Qualification

DEUTSCH FRENCH DUTCH
ஜேர்மன், சுவிஸ், பிரான்ஸ், நெதர்லாந்து
மொழிப் பாடநெறிகளும் நடைபெறுகின்றது

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605


23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294

IDP IELTS, Ukvi Exam centre

## மரண அறிவித்தல்

எம்முடன் 02 . 12 . 1960



இறைவனுடன் 27 . 12 . 2024

### செல்வபிரகாசம் குலச்செல்வம்

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வபிரகாசம் குலச்செல்வம் கடந்த 27.12.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் செல்வபிரகாசம் - இராசமணி தம்பதியரின் மகனும், ஸ்ரீறஜனா அவர்களின் கணவரும், அமரர் மகேஸ்வரன் - செல்வரத்தினம் தம்பதியரின் மருமகனும், சோபிகன், ராகவன் ஆகியோரின் தந்தையும், சரண்யாவின் மாமனும், அத்விக், ஆர்விகா ஆகியோரின் பேரனும், தவச்செல்வம், செல்வமலர் ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீதரன், ஆனந்தரூபன், சுந்தர்ராஜா, கனகராஜ், ஸ்ரீவதனா, சுஜாதா, வளர்மதி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2024) திங்கட்கிழமை அவரது உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் இருளன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 2139) A-1 **077 9672 258, 077 069 4796** தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 04 . 1950



இறப்பு 28 . 12 . 2024

### திருமதி தர்மராணி ஜெகநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மராணி ஜெகநாதன் அவர்கள் நேற்று (28.12.2024) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு- அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பு - செல்லம் தம்பதியரின் மருமகளும், ஜெகநாதனின் (ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்) அன்பு மனைவியும், ஜெகதீசன், சுதாயினி, தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கம்சாயினி, அகிலதாசன் (மக்கள் வங்கி ஊழியர், பிரதான வீதி கிளை), பியோமசலீஸ் எலிசா (மத போதகர் - தீர்க்கதரிசன விடுதலையின் ஊழியங்கள்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நேசராசா, அமிர்தலிங்கம், தர்மகுலதேவி, கேதீஸ்வரன், பரமேஸ்வரி மற்றும் சுரேந்திரன் (இத்தாலி), ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகேஸ்வரி, பரநிருபராணி, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் வசந்தகுமாரி, சந்திரகுமார், காலஞ்சென்ற தவமணி மற்றும் பத்மநாதன், நீலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் யோகேஸ்வரி, கனகரத்தினம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், ஜோண்ஸ்மித், அன்ரன்ஜோய், ஜொய்சிகா, ஜோண் சாமுவேல் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**242/2, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்
077 248 7022**

(CS 2137) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி. மங்கயற்கரசி கணபதிப்பிள்ளை

யாழ்-கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டு, பின்னர் வெள்ளவத்தை, இங்கிலாந்து ஆகிய இடங்களை வசிப்பிடமாக கொண்ட திருமதி மங்கயற்கரசி கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த 18.12.2024 புதன்கிழமை இங்கிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், பரதன், தாரிணி, தர்சினி, திருமாறன், தபோதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், எழிலரசி, தவேந்திரராஜா, சுதாஜினி, யோகராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், கமலாம்பிகை மற்றும் சபாநாதன், பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தனலஷ்மி, பத்மநாதன், சரஸ்வதி, சிவகாமதேவி, சிவசெந்திநாதன், மனோன்மணி மற்றும் ஈஸ்வரி, யாழைப்பழித்தமொழியம்மை, சிவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற திரு மற்றும் திருமதி பரமேஸ்வரன் (துன்னாலை), காலஞ்சென்ற திரு மற்றும் திருமதி செல்லத்துரை (வதிரி), திரு.திருமதி. விநாயகமூர்த்தி (வதிரி), காலஞ்சென்ற திரு.திருமதி. சிதம்பரநாதன் (கரவெட்டி) ஆகியோரின் சம்பந்தியும், கேஷின், அனிஷன், ரணேஷ், சகீரா, மகிரன், நிருஜன், கிருத்திக் அபித்தா, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகளும் பூதவுடல் தகனமும் இன்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இடம்பெறும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:
பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்
தொடர்பு: திருமாறன் - 07725 961324 | பரதன் -07834 615734**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேசுவேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் தனிப்பட்ட முறையில் இந்திய அரசாங்கத்துடன் பேசுவேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர்களின் சம்மேளனப் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழரின் அரசியலில் இந்தியா இன்று நேற்று அல்ல 1970, 60களில் இருந்தே முக்கியமான காரணியாக இருந்திருக்கின்றது. பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்று பேச்சுவார்த்தை நடத்தி எந்த முடிவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.


யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் அமைச்சருக்கு மேலதிகமாக கட்டாயமாக நான் பேசுவேன். சட்டங்களை இயற்றக்கூடிய பெரும்பான்மை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ளது.

எங்களது கடல் எல்லைகளைப் பாதுகாப்பது தொடர்பான சட்டங்களை உருவாக்குவதற்கான வலு தேசிய மக்கள் சக்தியிடம் இருக்கின்றது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் இலங்கை இருப்பதன் காரணமாக இந்த விடயம் அரசியலுக்கு அப்பால் மக்கள் நலன் சார்ந்து போகுமா என்பது கேள்விக்குறி.

ஆனால், யாழ்ப்பாண மீனவர்களை பொறுத்த வரைக்கும் இது ஒரு வாழ்வாதாரப் பிரச்சினை. இந்திய அரசாங்கத்துடன் தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நான் கருத்துகளை முன்வைப்பேன். இது தொடர்பில் திடமான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் மூன்று தேசிய மக்கள்சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளதுடன் கடற்றொழில் மற்றும் மீன்பிடி அமைச்சரும் எம்மக்களின் வாக்குகள் மூலமே தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றவர். எனவே இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கவேண்டிய பொறுப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ளது" - என்றார். (ம-26)

# மரண அறிவித்தல்



தோற்றம்
30 . 7 . 1935

மறைவு
28 . 12 . 2024

**லயன் மூத்ததம்பி கனகரத்தினம் B.Com**

(ஓய்வுபெற்ற பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மாவட்டச் செயலகம் - மன்னார்)

பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட 'லயன்' மூத்ததம்பி கனகரத்தினம் B.Com (ஓய்வுபெற்ற பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மாவட்டச் செயலகம் - மன்னார்) அவர்கள் நேற்று (28.12.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - இளையபிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி (தலைமை ஆசிரியர்) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி (பிரதி அதிபர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், இளங்கோவன் (வைத்தியர், UK), வரதன், அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கவிதா அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் நவரத்தினம், தெய்வானைப்பிள்ளை, தங்கம், இராசு, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயவேல், ஜெயராம், கபீஷன், கபீஷிகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சண்முகராசா அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2024) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


"சரஸ்வதிவாசா"
மகிழடி வீதி,
கோப்பாய் வடக்கு.

தகவல் : குடும்பத்தினர்
வரதன் - 077 611 6005
அரவிந்தன் - 077 895 3861

(CS/57076) J-1

**Dual Diploma** With UK Qualification

**English + IT**



IT Courses
Diploma in IT
Graphic Designing
Web Designing
Computerized Accounting

BRITISH COLLEGE Of Education

More information 0777- 695605

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332[illegible]

IDP IELTS, Ukvi Exam centre

**வேலைவாய்ப்பு**

கட்டுமானப் பொருட்களின் இறக்குமதி மற்றும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற நிறுவனம் யாழ்ப்பாணத்தில் அதன் செயற்பாடுகளுக்காக பின்வரும் வெற்றிடங்களைக் கொண்டுள்ளது.

- Cashier
- Stores Helpers

தகுதியுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பங்களை கல்வித்தகுதி, வேலை அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல் அல்லது தபால் மூலம் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் அனுப்பவும்.

careers@nvclgroup.com
No.70, K.Cyril C.Perera Mawatha, Colombo 13.

**தேவை**

யாழ் நகருக்கு அண்மையில் சாப்பாட்டுடன் தங்குவதற்கு அறை ஒன்று வாடகைக்குத் தேவை.

071 611 6305

(CR/44001) J-1

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
O/L, A/L கலைப்பிரிவு வகுப்புகள். சிறந்த ஆசிரியர்கள் குழாம்
வினாவிடை , மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறுகின்றன.
குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை

TEL:- 077 675 1649

(CS/2115) J-1

**வீடு வாடகைக்கு**

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட சுற்றாடலில் வீட்டின் கீழ்பகுதி வாடகைக்குண்டு.

076 252 8327

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 286 6429

(CR/43998) J-1

**மணமகள் தேவை**

யாழ். இந்து (V) 1990 இல் பிறந்த பரணி நட்சத்திரம் மேஷ லக்கினத்தில் 3ம் பாதம் ஜப்பானில் ஆட்டோ மொபைல் பொறியியலாளராக (Auto Moblile Engineer) தொழில் புரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

077 943 4738

(CR/43999) J-1

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

K.K.S வீதி, மல்லாகத்தில் அமைந்துள்ள ஒழுங்கையில் இரண்டாவது வீடு, 3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன் கூடிய 2.5 பரப்பில் அமைந்துள்ள வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

076 744 8099

(CR/44000) J-1

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/2119) J-1

**வேலைக்கு பெண்கள் தேவை**

கொக்குவிலில் உள்ள புத்தக கடை ஒன்றில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. சம்பளத்துடன் போக்குவரத்து செலவும் வழங்கப்படும்.

077 748 0357

(cs.57027) N-1

**விற்பனைக்கு**

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பாண்புறுட், ரகன் புறுட், செவிழ தென்னை, விலும்பி, நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா, கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 11 . 1942



மறைவு
27 . 12 . 2024

## திருமதி சிவகாமசுந்தரி சண்முகராஜா (சவுந்தாள்)

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாம சுந்தரி சண்முகராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (27.12.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை (ஓய்வுபெற்ற நீதிபதி) - மாருதப்பிரவீகவல்லி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முக ராஜா (K.A எஞ்சினியஸ்) அவர்களின் ஆசை மனைவியும், சிவஞானவல்லி, ஆனந்தகுமாரசாமி, கனகசுந்தரி, Dr. கிருஷ்ணாள், முத்துகுமாரசாமி, பருவதா தேவி, சிவரூபவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் சிவமனோகரி, சிதம்பரநாதன், காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் சிவனேஸ்வரி, தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான சுரேந்திரன், இராஜலக்சுமி, முத்துலக்ஷ்மி மற்றும் பாக்கியலக்சுமி, காலஞ்சென்றவர்களான சுந்தரராஜா, நவரட்ணராஜா மற்றும் மங்கயற்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**128, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

(CS 2083) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 025 2341**

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்



வையத்துள் : 21.10.1941 வானுலகில் : 10.01.2024

## அமரர் தர்மாம்பிகைஅம்மா லிங்கோற்பவநாதர்

அழுதழுது கண்ணீரும் காயவில்லை,
தொழுதேத்தும் உங்களையும்
காணவில்லை, விளக்கேற்றும் பெருமாட்டி
எங்கே என்று வழி தேடி விழி சிந்தி நிற்கின்றோம்.


நிழலின் அருமை போல உங்கள்
மறைவின் பின்னரே மகத்துவம்
புரிகின்றது, உங்களால் மட்டுமே முடிந்த
பணிகளை இன்று நாம் செய்யும் பொழுது
கண்கள் கண்ணீரால் நனைகின்றன.
ஆண்டொன்றானாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு நீங்காது.

**236, செம்மண் றோட்,**
**நாயன்மார்கட்டு.**

(cs.57066) (N-1)

**உங்கள் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## வயிரவப்பிள்ளை செல்வரட்ணம்

### (செல்வம் பிரதர்ஸ் உரிமையாளர்- மன்னார்)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவப்பிள்ளை செல்வரட்ணம் நேற்றுமுன்தினம் (27.12.2024) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவப்பிள்ளை-சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - திரவியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் அருள்வாணி (லண்டன்), சிவசங்கரன் (லண்டன்), சிந்து (இலங்கை வங்கி, மன்னார்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் பரதன் (லண்டன்), தனஞ்செயன் (தேசிய நீர் வடிகாலமைப்பு சபை, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மனோரஞ்சிதம் (கனடா), யோகேஸ்வரி (கனடா), பவளமணி, இராசேந்திரம், காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராஜா, திருநாவுக்கரசு, மகாலிங்கம் மற்றும் சோதிமலர், செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான குமாரலிங்கம் மற்றும் கனகலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் விதுன், ரோஷ்ணவி (லண்டன்), அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

மலர்வு
14.04.1944

உதிர்வு
27.12.2024

**தகவல் : குடும்பத்தினர் - மன்னார்**
**Tel : 0777 395792, 077 3657847**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நத்தார் விழா!

சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் நத்தார் விழா மன்றத்தின் நிர்வாக இயக்குநர் இரா.மதிகரன் தலைமையில் அரியாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-22,159)



அடியார் ஒருவரின் தனிப்பட்ட நிதிப்பங்களிப்பில் சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவில் தீர்த்தக் காணிக்கு அருகில் தீர்த்த இளைப்பாறு மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

## தமிழரசின் பதில்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. மாவை சேனாதிராஜாவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்வதா? அல்லது அவரைத் தொடர்ந்தும் தலைவராகச் செயற்பட அனுமதிப்பதா? என்பது தொடர்பில் மத்திய குழுவில் வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என்ற முன்னறிவிப்புகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இந்தக் கூட்டம் ஆரம்பமான போதிலும், அவ்வாறான வாக்கெடுப்பு எதுவும் இடம்பெறவில்லை. மாவை சேனாதிராஜாவின் நற்பெயருக்கு களங்கம் இல்லாமலும், அவருடைய நன்மை கருதியும் வாக்கெடுப்பை மேற்கொள்ளாமல், அவருடைய பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்ளுமாறு 18 உறுப்பினர்களால் கையொப்பமிட்ட ஆவணம் ஒன்று சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. இதையடுத்து, மாவையின் பதவி விலகல் கடிதத்தை கட்சியின் மத்திய குழு ஏற்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் தலைவராக இருந்தவர் பதவி விலகினால், அடுத்த நிர்வாகத் தெரிவு இடம்பெறும் வரையிலான எஞ்சிய காலத்துக்கு பதில்தலைவர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் வடக்குமாகாண அவைத்தலைவரும், கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவருமான சீ.வி.கே. சிவஞானம் பதில் தலைவராகவும், மாவை சேனாதிராஜா அரசியல்குழுத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிய போது, அவர் அரசியல்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். இதன் அடிப்படையிலேயே, மாவை சேனாதிராஜாவும் அரசியல்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது. (அ-ம-110)

## தமிழரசின்...

செயற்படுவார் என்று கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராக ஸ்ரீநேசன் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அதே பதவியில் தொடர்வார் என்றும் சீ.வி.கே.சிவஞானம் மேலும் கூறியுள்ளார். (அ-ம-110)

## மாவையே...

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் இருந்து நேற்று வெளிநடப்புச் செய்த அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழரசுக் கட்சி தீர்மானங்களை எடுக்கும்போது அனைவரையும் சாப்பாட்டுக்குச் செல்லுமாறு தெரிவித்துவிட்டே தீர்மானங்களை எடுப்பது வழமை. இன்றும் அதேநிலைதான் தொடர்ந்தது. தேர்தல் நியமனக் குழுவிலும் இதேநிலைதான் இடம்பெற்றது. தற்போதைய செயலாளர் இருக்கும்போதுதான் இந்தக் கட்சியில் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. தலைவரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவில் எவருக்குமே இல்லை. அதனை நான் நேரடியாக மத்திய குழுவுக்குத் தெரிவித்துவிட்டு கூட்டத்திலிருந்து வெளிநடப்புச்செய்துள்ளேன். என்னுடைய நோக்கம் கட்சியைச் சீராக்குவதுதான்" - என்றார். (அ-ம-110)

## தமிழரசிலிருந்து...

போது, தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் மூலம் போட்டியிட்டவர்களை கட்சியில் இருந்து உடனடியாக இடைநிறுத்துவது என்று தீர்மானித்துள்ளோம். அவ்வாறானவர்களின் பெயர்கள் வர்த்தமானியில் உள்ளது. அத்துடன் வேறுகட்சிகள் மற்றும் குழுக்களுக்காக பிரசாரம் செய்தவர்கள் மற்றும் கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். சிலருக்கு எதிராக எடுக்கப்பட்டிருக்கிறது - என்றார். (அ-ம-110)

## 15 லட்சம்...

பிரிவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 15 லட்சம் ரூபாவை ஒருவரிடம் இருந்து மோசடி செய்ததாக யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் பெற்றுக்கொண்ட பணத்துக்காக சந்தேகநபர் காசோலை வழங்கியபோதிலும், குறித்த காசோலை திரும்பியதைத் தொடர்ந்தே அவர் மீதான முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் தலைமறைவாக இருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## தமிழரசுக்...

இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவரிடம் விளக்கம் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-110)

## பொய்களைக்...

ஆபத்தாக மாறியுள்ளது என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"செய்ய முடியாத அதேபோல நடைமுறைக்கு சாத்தியமற்ற ஆயிரக்கணக்கான பொய்களைக்கூறியே தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியது. எம்மால் செய்யக்கூடிய விடயங்களை மாத்திரமே நாம் தேர்தல் காலங்களில் உறுதிமொழிகளாக வழங்கினோம்.

தாம் கூறிய பொய்களே அரசாங்கத்துக்கு இன்று ஆபத்தாக மாறியுள்ளது. எனவே, தற்போதாவது உண்மை நிலைமையை நாட்டு மக்களுக்குக் கூறவேண்டும். குறைந்தபட்சம் நாட்டு மக்களுக்கு மூவேளை உண்ணக்கூடிய வகையிலான சூழ்நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

ஆட்சிக்கு வந்தபிறகு மின்கட்டணம் குறைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மக்களிடம் கருத்துக்கோருகின்றோம் எனக்கூறி தற்போது காலம் கடத்தப்படுகின்றது" - என்றார். (அ-ம-44)

## மஹிந்தவின்...

மஹிந்தவின் பாதுகாப்பு எழுந்தமானமாகக் குறைக்கப்படவில்லை. அவருக்கான பாதுகாப்புத் தொடர்பில் முழுமையான மறுபரிசீலனைகள் மற்றும் புலனாய்வுத்துறையின் அறிக்கைகள் வழங்கப்பட்ட பின்னரே பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது 60 பொலிஸாரால் அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. இவ்வளவு பொலிஸார் தேவையா? என்ற கேள்வியும் எழுகின்றது. எனவே, மஹிந்தவின் பாதுகாப்பை மேலும் குறைக்குமாறு அறிவுறுத்தினால், அதையும் செய்வோம். ஏனெனில் மக்களின் பணத்தை நாம் விரயம் செய்வதற்கு விரும்பவில்லை - என்றார். (அ-ம-44)

## மூச்சுத்...

ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## 50க்கும்...

அவருடன் பிறிதொருவரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நாட்டுத் துப்பாக்கி உள்ளிட்ட பல்வேறு பொருள்களும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகர், பூவரசங்குளம், நெடுங்கேணி, ஓமந்தை, கனகராயன்குளம் உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளில் சந்தேகநபர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அத்துடன், மேற்படி பொலிஸ் பிரிவுகளில் பதிவான பல்வேறு முறைப்பாடுகளில் இவர்கள் சந்தேகநபர்களாக உள்ளனர் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றங்களில் நான்கு திறந்த பிடியாணை மற்றும் ஆறு திகதியிடப்பட்ட பிடியாணை என்பன உள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

## இரண்டரை...

கோப்பாய் பொலிஸாரிடம் இது தொடர்பில் முறைப்பாடு வழங்கப்பட்டு நிலையில், முறைப்பாட்டின் மீதான விசாரணைகளைப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் இதர தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-26)

## வாளுடன்...

அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைகைமொழி டிப்ளோமா

யாழ்ப்பாணம், டிசெ.29
தேசியமொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் பெயார்மெட் நிறுவனத்தின் அனுசரணையில் சைகைமொழி டிப்ளோமாப் பாடநெறியின் ஆரம்பநிகழ்வு உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர் திருமதி எல். எம். றிட்மா நிசாந்தினி லன்சகார நிகழ்நிலைத் தொழில்நுட்பம் ஊடாகவும் கலந்து கொண்டனர். (ச-45-66)

## உலருணவுப் பொருள்கள் வழங்கிவைப்பு

சாவகச்சேரி, டிசெ.29
தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரண உலருணவுப் பொருள்கள் அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் கடைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை தத்தமது பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
முதற்கட்டமாக நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த ஆயிரத்து 550 குடும்பங்களுக்கு சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடையில் நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25,9)


## காணி விற்பனைக்கு

கந்தர் மடச்சந்திக்கும் Hindu Ladies College க்கும் இடையில் 1 1/4 பரப்பு காணி விற்பனைக்குள்ளது.

- பிரதான வீதியில் இருந்து 2ம் காணி
- சுற்று மதில்
- குழாய்க்கிணறு

தொடர்புகளுக்கு:
076 772 5781, 077 229 0303

## வேலையாள் தேவை

எமது புடைவை நிறுவனத்திற்கு முன் அனுபவம் உள்ள விற்பனைத்திறன் மற்றும் கணினி அறிவுள்ள ஆண் உதவி முகாமையாளர் தேவை. தகுதிக்கேற்ப 50,000 ரூபா மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.
(CS/21286) J-1
தொடர்பு:- 077 855 4840

## வீடு வாடகைக்கு

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள 2 A/C உடன் 3 அறைகள், வரவேற்பு அறை, சமையலறையுடன் அமைந்த புத்தம் புதிய ஆடம்பரவீடு மாத வாடகைக்கு உண்டு.
(cs.57080) (N-1
077 983 6719, 077 517 7183


## டிப்ளோமா சான்றிதழ் கையளிக்கும் நிகழ்வு





யாழ்ப்பாணம், டிசெ. 29
'டவர்' நாடக அரங்கப் பாடசாலையில் நாடகமும் அரங்கக் கலைகளுக்குமான உயர் டிப்ளோமா பாடநெறியை முடித்த மாணவர்களுக்கு உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ். இந்திய கலாசார மத்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், சிறப்பு விருந்தினர் களாக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடமாகாண பிரதமசெயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், கௌரவ விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ், டவர் மண்டப் பணிப்பாளர் நாயகம் டி.எம்.எஸ்.திஸாநாயக்க, டவர் மண்டப பிரதிப் பணிப்பாளர் சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச- 25, 125,20)


## மணமகன் தேவை

1990 ஆம் ஆண்டு பிறந்த இந்து கௌரவ குடும்பம், ரோகிணி நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற MSc ( Computer Science ) படித்த மணமகளுக்கு கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற 5 - 6 வயது வித்தியாசத்தில் மணமகன் தேவை.(அரசதொழில் புரிவோர் மற்றும் இந்தியாவில் வசிப்போரும் விரும்பத்தக்கது)
076 667 4608 Whatsapp 076 149 2546


## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 04 . 1990



மறைவு
28 . 12 . 2024

### சர்ஜனா கருணாகரன்

இலக்கம் 85 செம்மணி வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சர்ஜனா கருணாகரன் நேற்று (28.12.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் கருணாகரன்-எமிலி பத்மினி தம்பதியின் அன்பு மகளும் சஞ்சீவ், ஷோபனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.12.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லூர் பரியாக்கோப்பு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :-
குடும்பத்தினர்

## கடற்றொழிலாளர்களுடன் அர்ச்சுனா எம்.பி. சந்திப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் சம்மேளனத்தினருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று இடம் பெற்றுள்ளது.
இந்தக் கலந்துரையாடலின்போது, யாழ்ப்பாணத்தில் நிலவும் மீனவ கட்டுமானங்கள் தொடர்பான பிரச்சினைகள், இறங்குதுறைப் பிரச்சினைகள் மற்றும் அத்துமீறிய மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அர்ச்சுனாவுக்கு மீனவர்களால் முறைப்பாடு வழங்கப்பட்டது.
அந்த முறைப்பாடுகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, நாடாளுமன்றத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி விரைவில் தீர்வு பெற்றுத்தருவேன் என்று வாக்குறுதி வழங்கினரர். (ம-26)



கைதடி வளர்மதி அமைப்பின் ஒழுங்கமைப்பில் ஐரோப்பா மற்றும் கனடா நிர்வாகிகளின் அனுசரணையில் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவியில் பொருளாதாரம் நலிவுற்ற 90 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கைதடியில் அண்மையில் இடம் பெற்றது. (ச-22,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1990 இல் பிறந்த பூரம் நட்சத்திரம் 7 இல் செவ்வாய், கிரகபாவம் - 33 உள்ள அரச உத்தியோக மணமகனுக்கு 5 வயது வித்தியாசத்தில் அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

**077 914 7318 , 076 668 8199**

## வேலையாட்கள் தேவை

உணவகம் ஒன்றிற்கு ரொட்டி வேலை மற்றும் வெயிற்றர் வேலைக்கு வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு:

**077 967 6403**

9 மில்லியன் இலஞ்சம்

# மேல் மாகாணத்தில் இருவர் கைது

9 மில்லியன் ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் மேல் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரும் வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்ட குறித்த வர்த்தகரின் உறவினர் ஒருவரின் காணிக்கான நட்ட ஈட்டை விரைவில் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து அவர்கள் கையூட்டல் பெற முயன்றுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(ச-இ)

## 13 வருட காலமாக இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவைப்படுகிறது.

- திருநெல்வேலி (பலாலி வீதி)
- கோப்பாய் (பருத்தித்துறை வீதி)
- மானிப்பாய் (யாழ்ப்பாண வீதி/ சுதுமலை வீதி)
- பண்டத்தரிப்பு (சண்டிலிப்பாய் வீதி)

உரிய முற்பணம், தகுந்த வாடகை வழங்கப்படும்.

**077 337 4261**

(CS/57023) J-1

## புடைவைக் கடைக்கு பெண் வேலையாள் தேவை

திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு பெண் வேலையாள் தேவை.

நேரம் 9am - 7 pm.

அருகில் உள்ளவர் விரும்பத்தக்கது.

வயதெல்லை 18 - 30, சம்பளம் - 30000/-

தொடர்பு:- **077 789 8862**

(CS/57074) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி மெயின்றோட்டுடன் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 1 1/2, 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு, மேட்டுநிலம், நன்ல ஊற்று
- UDA அனுமதி, பிரதேசசபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
- பரம்பரை ஆவணம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை. பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை

குரு :- **076 069 1105, 076 298 1105**

(CS/57061) J-1

## சிங்களம்

அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு பேச்சுச் சிங்களம், பாடசாலை மாணவர்களுக்கான சிங்களம், தனியாக, குழுவாக கற்பிக்கப்படும். அனுபவம் மிக்க, அங்கீகாரம் பெற்ற ஆசிரியரால் நடாத்தப்படுகிறது. எளிதான, சரியான உச்சரிப்புடனான கற்றலுக்கு

**072 486 8480, 077 073 6409**

(CS/57071) J-1

## வீடு விற்பனைக்கு

வத்தளையில் 10 பேர்ச் காணியில் அமைந்துள்ள இரண்டு மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு

**076 726 9418**

## கல்வி சேவை

சுன்னாகம் K.K.S. வீதியில் அமைந்திருக்கும் கல்வி நிறுவனம் ஒன்றில் சகல வசதிகளையும் கொண்ட வகுப்பறைகள் உள்ளன. பெரிய / சிறிய குழு வகுப்புக்களுக்கு மிகவும் உகந்தது.

விபரங்களுக்கு:

**070 686 7695 / 076 897 6665**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து 2 - 3 Km தூரத்தில் 3 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு (வைத்தியர்) வீடு வாடகைக்குத் தேவை.

**077 030 4848**

(CS/57064) J-1

## SPOKEN ENGLISH

ஆசிரியர்கள் தொடக்கம் ஆங்கிலம் பேச வேண்டிய சகல தொழில் புரிவோர் Grade 7 to GCE O/L, GCE A/L, பட்டதாரிகள் English medium students.

யாழ் இந்து வீதியில்

K.Ganesh B.A **077 766 8725**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

**+61 421 290 240**

(CS/56843) J-1

## காணிகள் தேவை
## Pk Real Estates

PK. நிறுவனத்தின் ஊடாக யாழ்ப்பாணத்தில் காணிகள் அல்லது வீடுகள் விற்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ இருந்தால் உடனடியாக தொடர்புகொள்ளவும். (திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில், நல்லூர் பகுதி, யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவான் வீதியில் மண்கும்பான் மற்றும் பளை, சாவகச்சேரி)

**021 222 1813, 071 010 0002, + 4474 8130 4127**

**4 / 1, Sengunthа Market Kalviyankaadu, Jaffna.**

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் உள்ள பிரபல வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

- சந்தைப்படுத்தல் முகவர் (Marketing / Credit Officer),
- நிலையான வைப்பு/ சேமிப்பு அலுவலர் (FD/ Saving Officer)

ஆர்வம் உடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 651 9372, 077 662 0057**

(CS/57028) J-1




**Adjusttable Bed**

3 மாதங்கள் மட்டும் பாவித்தது. கால் பக்கமும், தலைப் பக்கமும் உயரம் சரிசெய்யக் கூடியது.

**Contact : 077 078 0240**

## காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.

விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)

தொடர்புக்கு:- **077 614 6434**

(CS/56903) J-1

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு "O" குருதிவகை சிறுநீரகம் அவசரமாக தேவை.

42 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும்.

**076 540 6732 (Whatsapp/ Call)**

**077 723 8937**

(CS/5696) J-1

## TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு

## செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்

பொறியியல் தொழினுட்பம்

உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

ஆரம்பம் : 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 மணி

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: **077 017 5346**

(CR/43966) J-1

## EXPRESS ACADEMY

86, இராஜேஸ்வரி வீதி, அரியாலை.

Group & Personal Classes ENGLISH

Past Papers (2024) O/L

By : C.S.K. Mayuran

- 25 Years Past Papers
- 10 Model Papers
- Spoken with Grammar

ஆரம்பம் : 01.01.2025

புதன்கிழமை மாலை 5.00 மணி

தொடர்புகளுக்கு:-

**077 193 0298**

(CS/57056) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

> யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
> சேனைத் தலைவராய்ச் சென்றோரு— மேனை
> வினையுலப்ப வேறாகி வீழ்வார் தாங் கொண்ட
> மனையாளை மாற்றார் கொள
>
> — நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | மார்கழி 14 | ஞாயிற்றுக்கிழமை (29.12.2024) | சிகரம் :233

# புதிய ஆண்டைத் திட்டமிடுதல்

நிலாந்தன்

இந்த ஆண்டில் என்ன கிடைத்ததோ அதிலிருந்துதான் அடுத்த ஆண்டு தொடங்கும். இந்த ஆண்டு என்ன கிடைத்தது? இரண்டு தேர்தல்கள் நடந்தன. இரண்டு தேர்தல்களின் விளைவாகவும் என்.பி.பி. மிகப்பெரிய பலத்தோடு ஆட்சிக்கு வந்திருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது, ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்தப்பட்ட தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ்த் தேர்தல் வரலாற்றில் ஒரு வேட்பாளர் பெற்ற ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றார். கட்சிகளைக்கடந்து தமிழ்மக்களைத் தேசமாகத் திரட்டலாம் என்ற முயற்சிக்கு கிடைத்த முதல் வெற்றியது.

மூன்றாவது. நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்மக்கள் மத்தியில் இருந்தும் என்.பி.பி. க்கு ஆதரவு கிடைத்திருக்கிறது. அதன்மூலம் தமிழ்மக்கள் தங்களை இலங்கையராகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்று என்.பி.பி.யின் தமிழ் ஆதரவாளர்கள் கூறத்தொடங்கி விட்டார்கள்.

நாலாவது, நாடாளுமன்றத்தில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக மேலும் மெலிந்து போயிருக்கிறார்கள்.

ஐந்தாவது, தமிழ்த்தேசியவாதம் பேசும் கட்சிகள் தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதிலும் வெற்றி பெறவில்லை. தங்களைக் கட்சிகளாகத் திரட்டுவதிலும் வெற்றிபெறவில்லை. ஒப்பீட்டளவில் அதிக ஆசனங்களை வென்ற தமிழரசுக் கட்சியானது நீதிமன்றத்தில் நிற்கிறது. எனவே ஒரு கட்சியாக அது தோல்வியடைந்து விட்டது. ஆனால் தமிழ் மக்கள் வேறு வழியின்றி அதற்கு வாக்களித்திருக்கிறார்கள்

இவைதான் இந்த ஆண்டில் தமிழ்மக்களுக்கு கிடைத்தவற்றுள் முக்கியமானவை. இவற்றின் தேறிய விளைவுகளே வரும் ஆண்டைத் தீர்மானிக்கும்.



தமிழ்மக்கள் ஒரு தேசமாக நாடாளுமன்றத்தில் மெலிந்து போயிருக்கும் ஓர் அரசியல் சூழலில் மூன்றில்இரண்டு பெரும்பான்மையை பெற்றிருக்கும் என்.பி.பி. அரசாங்கம் இனப்பிரச்சினையை எப்படி அணுகும்?

அரசறிவியலாளர் ஜெயதேவ உயாங்கொட பின்வருமாறு கூறுகிறார்.. "இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் உரையாடலையும் என்.பி.பி. தவிர்த்து ஒதுக்குகின்றது. ஐ.நா.வின் முகவரமைப்புகளினாலும் உள்ளூர் மற்றும் உலகளாவிய மனிதஉரிமைக் குழுக்களினாலும் ஊக்குவிக்கப்படும் முரண்பாடுகளுக்கான தீர்வு, நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றுக்கான லிபரல் போக்குடைய சமாதான உரையாடல்களையும் என்.பி.பி. தவிர்த்து ஒதுக்குகிறது." அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை பிராந்திய மற்றும் சர்வதேச மயநீக்கம் செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று உயாங்கொட கூறுகிறார்.

அதேசமயம் அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதி அநுர அங்கு பின்வருமாறு பேசியிருக்கிறார். "இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஒரு போதுமில்லாதவாறு வெளிப்படுத்தப்பட்ட மக்கள் ஆணை, எமது நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்பக்கூடிய அரசியல் மாற்றத்துக்கான விதைகளை விதைத்துள்ளது. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய திசைகளில் அமைந்துள்ள அனைத்து மாகாணங்களிலும் உள்ள பல்வேறு சமூகங்கள் மற்றும் பல்வேறு தரப்பு மக்களும் இந்த மக்கள் ஆணைக்கு பங்களித்தனர்."அதாவது தமிழ்மக்களின் ஆணை தனக்கு உண்டு என்று ஜனாதிபதி கூறுகிறார். அதன்மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆணை தனக்கு கிடைத்திருப்பதாக அவர் கூறவருகிறார்.

அவருடைய இந்திய விஜயத்தின்போது இந்தியா உத்தியோகபூர்வமாக 13ஆவது திருத்தத்தைப்பற்றி எதுவும் கூறவில்லை. பதிலாக யாப்பை முழுமையாக நிறைவேற்றுமாறுதான் கேட்கப்பட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தல்களை வைக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறது. '13'இன் மீதான அழுத்தத்தை இந்தியா குறைத்திருப்பது ஒரு கொள்கை மாற்றமாக ஒரு பகுதி ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால் கடந்த 15ஆண்டுகளிலும் இந்தியா '13'ஐ அழுத்திக் கூறிவந்தாலும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த தேவையான அழுத்தங்களை கொழும்பின் மீது பிரயோகித்திருக்கவில்லை. இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவிடமிருந்து வரக்கூடிய அழுத்தங்கள் தொடர்பான பயம் சிங்களத் தலைவர்களுக்கு எப்பொழுதோ இல்லாமல் போய்விட்டது.

நாட்டில் அதிகரித்துவரும் சீனாவின் பிரசன்னமானது சிங்களத் தலைவர்களின் பேரபலத்தை கூட்டியிருக்கிறது என்பதே உண்மைநிலை. கொழும்பை இறுக்கிப் பிடித்தால் அது சீனாவை நோக்கிச் சாய்ந்துவிடும் என்று ஏனைய தரப்புகள் பயப்படுவதை சிங்களத் தலைவர்கள் தமக்குரிய பேர வாய்ப்பாகக் கருதுகிறார்கள். தேர்தல் முடிந்தகையோடு வடக்கு ,கிழக்குக்கு வந்த முதலாவது தூதுவர் சீனத் தூதுவர்தான். அவர் வழமையாக தமிழர்கள் மத்தியில் இனப்பிரச்சினை தொடர்பாக உரையாடுவதில்லை. ஆனால் இம்முறை வழமைக்கு மாறாக யாழ். ஊடக அமையத்தில் உரையாற்றும்போது தேர்தல் முடிவுகளை வரவேற்றுக் கதைத்திருக்கிறார். குறிப்பாக தமிழ்மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்ததை அவர் பாராட்டியிருக்கிறார். அதன்மூலம் அவர் சொல்லாமல் சொல்லவருவது என்னவென்றால், தமிழ்மக்கள் என்.பி.பி. அரசாங்கத்தை நம்புகிறார்கள், எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியாவோ, ஐ.நா.வோ, ஐரோப்பிய ஒன்றியமோ, அமெரிக்காவோ தலையிடுவதற்கான தேவைகள் குறைந்துவிட்டன என்பதுதான்.

இவ்வாறு அரசறிவியலாளர் உயாங்கொடவும் சீனத்து தூதுவரும் கூறியவற்றைத் தொகுத்துப்பார்த்தால் கிடைக்கும் சித்திரம் மிகத்தெளிவானது. இனப்பிரச்சினையை பிராந்திய மயநீக்கம் அல்லது சர்வதேச மயநீக்கம் செய்ய முற்படும் சக்திகள் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் உற்சாகமடைந்திருக்கின்றன. ஆனால், தேசிய இனப்பிரச்சினைகள் உள்நாட்டுப் பிரச்சினைகள் அல்ல. அவை சாராம்சத்தில் பிராந்திய மற்றும் அனைத்துலகப் பிரச்சினைகள்தான். உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றின் மீது வெளிச்சக்திகள் தலையீடு செய்யும்போதே தேசிய இனப்பிரச்சினைகள் பூதாகரமாகின்றன. எனவே எல்லாத் தேசிய இனப்பிரச்சினைகளுக்கும் அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. உள்நாட்டுத் தீர்வு கிடையாது. திம்புவில் தொடங்கி ஜெனிவா வரையிலும் அதுதான் இலங்கை இனப்பிரச்சினையின் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை அதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால், மூன்றாவது தரப்பு ஒன்றின் மத்தியஸ்தம் அல்லது அழுத்தம் இல்லாமல் இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. ஆனால் கடந்த 15ஆண்டுகால அனுபவங்களின் அடிப்படையில் சொன்னால், தமிழ்த் தரப்பு பலவீனமடைந்து செல்லும் ஒரு பின்னணியில், மூன்றாவது தரப்பை இனப்பிரச்சினையில் இருந்து நீக்குவது ஒப்பீட்டளவில் இலகுவாகி வருகிறது.

அதாவது, பேச்சுக்கான தமிழ்த் தரப்பின் பேரபலம் குறைந்து வருகிறது என்பதைத்தான் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் நிரூபித்திருக்கின்றன. வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் அதேவிதமான தேர்தல் முடிவுகள் கிடைத்தால் தமிழ்மக்கள் ஒரு தரப்பாக மேலும் பலவீனப்படுவார்கள். அந்த வெற்றி தரும் உற்சாகத்தில் அரசாங்கம் ஒரு புதிய யாப்புக்கான தயாரிப்பு வேலைகளை முடுக்கிவிட முடியும்.

எனவே இன்னும் சில மாதங்களுக்குள் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால், தமிழ்த் தரப்பு இப்பொழுதே திட்டமிட வேண்டும். தேர்தல் அறிவிக்கும் வரை காத்திருந்து தேர்தல் கால ஐக்கியங்களுக்கு போவதைவிடவும் தேர்தலுக்கு முன்னரே தமிழ்மக்கள் தங்களை ஐக்கியப்படுத்த வேண்டும். இதை அதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால், தேர்தல் தேவைகளுக்காக ஐக்கியத்தை உருவாக்காமல் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஐக்கியத்தை, தேசத்தைத் திரட்டுவதற்கான ஐக்கியத்தைக் குறித்து தமிழ்க்கட்சிகள் சிந்திக்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான சிவில் சமூக யதார்த்தத்தின்படி கட்சிகளை அவ்வாறு ஒன்றிணைக்கும் வேலைகளில் சிவில் சமூகங்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அரிதாகவே தெரிகின்றன.

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
29 டிசெம்பர் 2024

# பொதுமக்களுக்கு அவசரமா ஒரு கடுதாசி

வணக்கம்

பொதுமக்களுக்கு ஒரு அவசர அறிவிப்பா இந்தக் கடுதாசியை எழுதிறன்.

எப்பவும் அரசியலையும், அரசியல்வாதியளையும், அதிகாரிகளையும் பற்றி எழுதி அலுத்துப்போச்சுது. அவையளைப் பற்றி எழுதிறது அரைச்ச மாவையே திருப்பித் திருப்பி அரைச்சுக்கொண்டிருக்கிற மாதிரிக்கிடக்கு. ஒரே முகமாப் பாக்காமல் அக்கம் பக்கத்திலையும் கண்ணைத் திருப்பிப் பாக்கவேணும்.

இண்டைக்குக் காலமை என்ர பேரன் ஒரு பேப்பரை வைச்சு வாசிச்சுக்கொண்டிருந்தான். "டே பேரா! இண்டைக்கு என்னடா புதினம்? எண்டு கேட்டன். அப்பு நத்தைச் செய்தி ஒண்டு இருக்கு எண்டு சொல்லிப்போட்டு "ஆபிரிக்கப் பெரும் நத்தைகளைக் கட்டுப்படுத்தாவிடில் விரைவிலேயே பேராபத்துகள் விளையும், எச்சரிக்கை" மூச்சுவிடாமல் வாசிச்சுத்தள்ளினான். இதென்னடா புதுசாக் கிடக்கு? ஒரு வழியிலையும் நாங்கள் தப்பேலாமல் கிடக்கு. முதல் கொரோனா எண்டாங்கள், கிட்டடியில எலிக்காய்ச்சல் எண்டாங்கள், இப்ப ஆபிரிக்க நத்தை எண்டு ஒரு புது விசயத்தைச் சொல்லினம் எண்டு புறுபுறுத்தன். பக்கத்தில பாற்காரப் பரமசிவம் வந்ததை நான் காணேல்லை.

என்ன? அன்னமுத்து காலங்காத்தாலை ...? எண்டு பரமசிவம் கேட்டார். விசயத்தைச் சொன்னன். அரசியல்வாதி மாதிரிச் சிலர் தங்கடை இருப்பைக் காட்ட, தான் ஏதாவதை அடிக்கடி சொல்லவேணும் எண்டதுக்காகச் சொல்லக் கூடும். உதை வடிவா ஆராயாமல் நம்பப்படாது எண்டு பரமசிவத்தார் சொன்னார். அவர் சொன்னதிலையும் உண்மை இருக்கெண்டு பட்டுது. ஆனால் அந்தச் செய்தியிலையும் உண்மை இருக்கலாம் எண்டும் நினைச்சன்.

சரி! தொடர்ச்சியா என்னடா மேனை எழுதிக்கிடக்கு? வாசி பாப்பம் எண்டு பேரனிட்டச் சொன்னன். அவன் வாசிக்கத்துவங்கினான்.

"ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட பெரும் நத்தைகள் சமீபத்தில் பெய்த பெருமழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் ஏற்கனவே இங்கு அவதானிக்கப்பட்டபோதும் இப்போது இவற்றின் பெருக்கம் அதிகமாக உள்ளது. பயிர்பச்சைகளையெல்லாம் தின்றுதீர்க்கும் இவை, உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் செயற்படுகின்றன. இப்போதே கட்டுப்படுத்தத் தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக இவை அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் எச்சரித்துள்ளார்." எண்டு எழுதிக்கிடக்கு அப்பு எண்டான் பேரன். சரி அதைக் கட்டுப்படுத்துறதுக்கு ஏதாச்சும் வழி இருக்கிறதா எழுதிக் கிடக்கோ? பார் அப்பு எண்டு பேரனிட்டைச் சொன்னன். "ஓம் அப்பு" எண்டபடி வாசிச்சான்.

ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திணைக்களங்களுக்காகக் காத்திராமல் பொது அமைப்புகளும், பொதுமக்களும் முன்வரவேண்டும். உப்பு நீர்க்கரைசல் உள்ள பாத்திரம் ஒன்றில் இவற்றை அமிழ்த்துவதன் மூலம் சுலபமாக அழிக்கமுடியும். ஆபிரிக்க நத்தைகள் நோய்க்காவிகளாகவும் இருப்பதால் வெறும் கைகளால் நேரடியாகத் தொடாமல் இலைகள், கடதாசிகள் போன்றவற்றால் இவற்றைப் பிடிப்பதே பாதுகாப்பானது. இதனை ஒரு சமூகக் கடமையாகக்கருதி நாம் விரைந்து செயற்படவில்லையெனில் ஏற்கனவே பெரிய பொருளாதாரச் சீரழிவுக்கும், சுற்றுச் சூழல் சீர்கேட்டுக்கும் ஆளாகியிருக்கும் இலங்கை இந்த நத்தையாலும் பெரும் சீரழிவுகளைச் சந்திக்கநேரும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது-எண்டு வாசிச்சு முடிச்சான்.

"பார் அன்னமுத்து! இவை நத்தையை நோய்க்காவி எண்டு எழுதினம். ஆனால் அச்சுவேலித் தொழிற்பேட்டைக்கு வந்த சீனாக்காரன் உதைப் பிடிச்சுப் பொரிச்சு நறுபிறு எண்டு திண்டவனாம். அப்ப அவன் நோய் வந்து செத்திருக்கவேணும் எல்லோ"-எண்டு பரமசிவம் சொன்னார்.

"என்னவாக் கிடந்தாலும் நத்தையை உயிரோடை விட்டு எங்களுக்கு ஒண்டும் ஆகப்போகிறது இல்லை. எதுக்கும் கவனமா இருப்பம் எண்டு நான் பரமசிவத்திட்டைச் சொல்ல பரமசிவத்தார் உடனை "இப்ப கிட்டடியிலை ராச பாதைப் பக்கம் போனனியளே அன்னமுத்து" எண்டு கேட்டார். "இல்லை" எண்டன் நான்.

றோட்டின்ரை இரண்டு பக்கமும் பாத்தினியம் பத்தையா வளர்ந்துபோய்க்கிடக்கு. இப்ப பத்து வருசத்துக்கு முன்னம் எண்டு நினைக்கிறன் பாத்தினியத்தை உடனை அழிக்கவேணும், விட்டால் பிரச்சினை, நிலத்தில உள்ள பசளை எல்லாத்தையும் உறிஞ்சி எடுத்துப்போடும், பிறகு பயிர் ஒண்டும் விளையாது, மனுசருக்குச் சொறி வந்திடும், தோல்வருத்தம் வரும், கன்னடா மாநிலத்திலை மந்திரி ஒருதருக்கு இதாலை ஒவ்வாமை வந்து ஆபத்தாப்போச்சுது எண்டு கனக்கச் சொன்னவை. சொன்னது மட்டுமில்லாமல் அதை இதைச் சொல்லி வெருட்டினவை.

பாத்தினியம் பத்தைக்குள்ள வளரேல்லை. றோட்டுக் கரையிலையும், தோட்ட வரம்புகளிலையும், வீடுகளுக்கு முன்னாலையும் மனுசர் நடமாடுற இடங்களிலையும் தான் அதிகம் வளர்ந்துகிடக்கிது. அதைக் கட்டுப்படுத்தச் சட்டம் இருக்கு. ஆர் அதைச் செய்யிறது. ஆர் அதைக் கவனிக்கிறது. பாத்தினியத்தின்ர தின்மை பற்றி ஆர் சனத்துக்குப் படிப்பிக்கிறது. ஆர் அவைக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திறது.

எங்கையோ கிடக்கிற உக்ரைனைப் பற்றிக் கவலைப்பட்டுக் கட்டுரை எழுதிறவைக்கும் கண்ணுக்கு முன்னாலை இருக்கிற இதைப் போல விசயங்களை எழுத நேரமில்லை. விவசாயக் கட்டுரையள் நல்லா எழுதினம் எண்டு விருது வேறை குடுக்கினம். அவையளைத் தலைக்கு மேலை வைச்சுக் கொண்டாடினம். தேவையில்லாத வேலையைப் பாக்கிறவைக்குத் தெரியாதோ பாத்தினியம் இப்ப பத்து மடங்கு பெருகியிருக்குது எண்ட விசயம். அநுர பன்னிரண்டைச் செய்வாரோ? பதின்மூண்டைத் தருவாரோ? எண்டதைக் கதைச்சுக்கொண்டு நேரத்தைப் போக்கிறம். பதின்மூண்டு போனால் மாகாணசபை போகும். மாகாணசபை ஒரு வெள்ளையானை எண்ட கதை ஒருதருக்கும் தெரியாதோ! இப்ப காலநிலை நல்லாக்கிடக்கு. வீட்டு வாசலிலை இருக்கிற பிரச்சினையை முதல் பாப்பம். அதை அவசரமாப் பாக்கவேணும். நிலத்தை ஆக்கிரமிக்காமல் பாக்கிறதல்ல முக்கியம். இருக்கிறதை நல்லா வைச்சிருக்கிறதுதான் அதிக முக்கியம்.

கண்டபடி பனையைத் தறிக்கிறியள். பனையள் இல்லாட்டி கடல் நிலத்தை அரிக்கும். இருக்கிற நிலமும் சவராப்போகும். ஆழக் கிணத்தைத் தோண்ட ரில்லர் மிஷின்கள் தாறுமாறா அங்கையும் இஞ்சையும் ஓடிக்கொண்டு இருக்குது. சட்ட விரோதமா ஆழ் கிணறைத் தோண்டத் தோண்ட நிலத்தடி நீர் இன்னும் கீழ கீழ போகப்போகுது. மேல் கிணறுக்குத் தண்ணி வராமல் கிணறு வத்தும். குடிக்கத் தண்ணி இல்லாமல் சனம் சாகப்போகுது. முதலில இதுகளை அவசர அவசரமாக் கவனியுங்கோ. பிரச்சினையள் கனக்கக் காலுக்குள்ள வந்திட்டுது. கண்ணை மூடி நித்திரை கொள்ளாதையுங்கோ. கவனம்.

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளும் குளிரும்

சூரியனின் நீண்ட
விடைபெறுதலுக்குப் பின்
தனித்து விடப்பட்ட
இந்த மாலை
இருள் அள்ளிப் பூசிக்கொள்கிறது..

தலைக்கு மேல் நட்சத்திரங்களாய்
ஒளிர்கின்றன மின்விளக்குகள்
விழாக்கோலத்தில் இந்த நகரம்..

இருளின் மீது படரும் ஒளிதான்
இங்கே உலகமாய்
பிரபஞ்சமாய் விரிகிறது..
எருசலேம் நகரத்தின்
பிரதிகளாய்
பாலனின் வருகைக்காய்
விழித்திருக்கும்
மார்கழி இரவுகள்
எப்போதும் தனியழகுதான்..

சத்தமில்லாமல் சிந்தும் பனி
காற்றைத் தீண்டி குளிரை
ஒளிரும் விளக்குகள் மீது
கவிழ்க்கின்றது..
பொன்மஞ்சள் நிறத்தில்
ஒளிர்கின்றது குளிரும் இரவும்..

இருளும் குளிரும் காதலுடன்
மணிக்கணக்கில் கூடிக் களிக்கும்
இந்தப் பொழுதுகளை
நானும் அணைத்துக்கொள்கிறேன்
சப்தமில்லாமல்..

காதல்வயப்பட்ட பெண் ஒருத்தி
கிற்றாரை கையில் ஏந்தி
கொஞ்சம் விரகத்தை
குரலில் குழைத்துப் பாடுகிறாள்
தனக்காகவே ஒரு பாடலை..

தூரத்தில் ஒரு பிடில் கலைஞன்
இசைக்கிறான்
அவன் தாபம் பிடில் நரம்புகளில்
கொழுந்துவிட்டெரிகிறது..

கொஞ்சும் குளிருக்கு இதமாய்
கொஞ்சம் சிவப்பு மதுவால்
குளிரைச் சமப்படுத்தியபடி
உரசிக்கொள்கின்றன சில தோள்கள்..

சலனங்கள் தீயாய் வழிகின்றன.
சலனமற்று அணைக்கிறது இரவு..

பேரெழில்
பெருங்குளிர்
நிர்மலமான வானம்
சலனமற்ற நகரம்
இந்தப் பொழுதில்
இரவு ஆழமாகிறது
கூடவே அழகாகிறது..

ஆம்..
எல்லோரும் குளிருக்கு இதமாய்
ஏதோவொரு வகையில்
தீ வளர்க்கிறார்கள்
நானும் ஒரு கூடை நிறைய
அள்ளிக்கொள்கிறேன்
விம்பங்களை
கவிதையில் தீ வளர்க்க..

உள்ளதை உள்ளபடியே
சொல்லிவிடும்
என் கவிதைகளின்
இயல்புத்தன்மைதான்
காட்சிகளை கனகச்சிதமாய்
பொருத்திவிடுகிறது
மொழிக்குச் செலுத்தும்
நன்றியாகவும் இருக்கிறது..

பனி இரவுகளைக்
கடப்பதென்றும் கடினமல்ல
எனக்கொரு கவிதை போதும்

சங்கரி சிவகணேசன்

# விச்சுழி மாமியும் வெள்ளந்தி மருமோனும்



பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்,
*தமிழ்த்துறைத் தலைவர்,*
*கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

யாழ்ப்பாணத்தாரின்ர உணவு நடைமுறைகளில் பத்தியக்கறிக்கு எப்பவுமே ஒரு தனியிடம்தான். அதுவும் 'பிள்ளைப்பேறு' பத்தியக்கறியெண்டா சொல்லத்தேவையில்லை. பிள்ளை பெறுவதென்னவோ 'மோள்' எண்டாலும் இந்த நடைமுறைகளில் மாமிதான் 'தலையாரி' பாருங்கோ. அளவுப்பிரமாண ஊறல் சாராயப்பருக்கல், கலப்புக் குழைத் தண்ணிவார்வை, பத்தியக்கறி, பிள்ளைப்பேத்துக்காறிக்கான சாப்பாடு இந்த 'மினிஸ்ரி'களெல்லாம் நிறைவேற்று அதிகார மாமியிடமே எப்போதும் இருக்கும். மாமியின் நேரடிக்கண்காணிப்பிலதான் இவை எப்பவுமே பெரும்பாலும் நடக்கும்.

பத்தியக்கறிக்கெண்டே யாழ்ப்பாணத்தார் சிலவகை மீனுகளுக்கு 'லைசன்சு' குடுத்துவைச்சிருக்கினம். நெடுவால் திரளி, பறட்டை, ஒட்டி, விளைக்குட்டி, நகரை என இப்பட்டியல் நீளும். வடமராட்சியார் எப்பவும் பெரும்பாலும் 'துள்ளுமண்டைதான்'. நான் மீனைச் சொன்னனான். அவங்களோட கொழுவக்கூடாது. இந்த வகையறாக்களில் 'நெடுவால்திரளியார்'தான் வலுவிசேசம். வேற 'பொடி' மீனுகளும் இவரோட சேர்ந்தால் பிறகு சொல்லத் தேவையில்லை. எதுவெண்டாலும் ஒரு கையளவான நீளத்தில் மீன் இருப்பதுதான் உவப்புப் பாருங்கோ.

செத்தல் மிளகாய் நீங்கலாக மல்லி, உள்ளி, இஞ்சி, மிளகு, சீரகம், சுட்டதேங்காய்ச்சொட்டு இப்படிப் பலதையும் சேர்த்து அம்மியில போட்டு 'பட்டாக' அரைச்சுக் கொதிக்கவிட்டு, கொதியெழும்ப அதுக்குள்ள மீனத்தாட்டு பதத்துக்கு 'ஆத்தி ஆத்தி' எடுக்கேக்க வருமே ஒரு வாசம். இந்த வாசத்துக்கே எத்தனை பிள்ளையும் பெறலாம். 'அது' கிடக்கட்டும்... எது?

'அம்மி அரைப்பு' எண்டால் என்ன சும்மாவே. அதுவும் ஒரு கலைதான் பாருங்கோ. கிராமத்து வீடுகளின் அம்மிகள் பெரும்பாலும் நாவிதர்களின் சவரக்கத்தித் திட்டுக்கல்லுப்போல எப்பவும் 'உள்வளைஞ்சே' காணப்படும். அவ்வளவு இழுவை, அவ்வளவு ஒரு அரையல்! அந்த அம்மிக்கு முன்னிருந்து, காலை அளவாப்பிளந்து நீட்டி, அம்மியின் மேல் குளவியைச் சரித்து முன்னும் பின்னும் நீட்டியிழுத்து, சரக்குகள் சிந்தாமல் அரைக்கும் நுட்பம் இருக்கே. என்னத்தச் சொல்ல. சரக்குகளைப் பட்டாக அரைத்தெடுத்து அம்மி நடுவே குளவியை குத்தாக நிறுத்தி விரல்கொண்டு வழித்தெடுத்துக் கிண்ணியில எடுத்து சொட்டுத் தண்ணிய அம்மி மேல் பனுக்கி விரலால் வழிச்சுக்கழுவி அதனையும் கிண்ணியில ஏந்துவது 'ஜெயசூரியாவின்ர சிக்சரைக் கையால பிடிக்கிற வேலைதான்.' ஏலுமே! எல்லாராலயும் அது ஏலாது. உங்களுக்கு ஒண்டு தெரியுமோ? யாழ்ப்பாணத்துச் சம்பந்த நடைமுறைகளில் ஒரு 'பெடிச்சி' வலு கெட்டிக்காரி எண்டுறதுக்கு புழக்கத்தில உள்ள ஒரு வசனம் 'அவளோ! அம்மியில அரைச்சு கிண்ணியில வழிச்செடுப்பாள்' எண்டுறதுதான் அது. அவ்வளவு நுட்பமான வேலை அது.

சரி விசயத்துக்கு வருவம். இந்தப் பத்தியக்கறியில மருமோனுக்கு எப்பவுமே ஒரு 'மையல்' இருப்பதுண்டு. பத்தியத்துக்கான மீனை வாங்க அலைஞ்சுதிரிஞ்சு அலுவல் பார்ப்பது பெரும்பாலும் அவரே. அவர் பார்த்த 'அலுவல்தானே?' பிள்ளைப் பேத்துக்காரியின்ர சாப்பாட்டில எவரும் கண்வைப்பதை மாமியார்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை. இதனால் 'கதிர்காமப் பூசை' போல எல்லாமே ஒருவித மறைவிலதான் நடக்கும். ஆனாலும் மனுசிக்காரிக்கு புரிசன்மேல் ஒரு 'பக்கிளும்' 'பரிதாபமும்' எப்போதும் இருந்து கொண்டே இருப்பதுண்டு. இருக்காதா பின்ன. மாமியாருக்கும் அது விளங்காததல்ல. மருமோன் பத்தியக்கறியில ஆசைப்படக்கூடாதெண்டு கறிகொதி எழும்பேக்க எரியும் அடுப்புக்குள்ள 'வேப்பெண்ணெய் மண்டியை' அவக்கென ஊத்தி ஒருவித நாத்தத்தை மாமியார் எழுப்புவார். மருமோனைக் கிளப்புவதற்கான கடைசி ஆயுதம் இது. நாத்தம் தாங்காமல் பெடல் இல்லாத சைக்கிள் பெடல் கம்பியில 'கெந்தி உழக்கி' ஏறிய மருமோன், நாத்தம் எத்துப்படாத தூரத்துக்கும் போய் 'காட்ஸ்' விளையாடி சாவதானமான வீட்டுக்கு லைட்டான ஒரு 'டிம்மில்' வருவதுண்டு.

மருமோனின் நன்னடத்தையைப் பொறுத்து மாமியார் தலைத்துண்டைத் தனக்கு வைத்துக்கொண்டு மருமோனுக்கு சில புறவெட்டு மீன்துண்டுகளையும் கறிச்சட்டிக் கரையினையும் பிரட்டியெடுத்துக் கொடுப்பதுண்டு. நல்லுறவு இருந்தால் சில நடுத்துண்டு மீன்களும் சற்று நீர்ப்பிடியான கறியும் அவருக்குக் கிடைக்கும். மருமோனின் உழைப்பும் மாமியாரின் தீர்மானத்தில் செல்வாக்கைச் செலுத்தும். ஆனாலும் தாய்க்குத் தெரியாமலே செருக்கிய தேங்காய்ச் சிரட்டையில் பத்தியக் கறியை ஊத்தி சாப்பாட்டுக்கு முன்னர் குடிப்பது போல தாய்க்குப் 'போக்குக்காட்டி' புரிசனுக்கு களவாக வைத்திருந்து மனைவியர் கொடுப்பதுண்டு. என்னதான் 'லேபர்றூமுக்குள்ள' வலிதாங்காமல் புரியனைத் திட்டித்தீர்த்தாலும் பிள்ளைமுகம் காண எல்லாமே 'சூரியனைக் கண்ட பனிபோல' மறைஞ்சுபோகும். பிறகென்ன.........?

கதையில ஊறல் சாராயத்த மறந்தே போனன் பாருங்கோ. இப்பத்தைய விசுக்கி, விறண்டி வரமுன்னம் பிள்ளைப் பெத்தவைக்கு ஊறல் சாராயம் தான் பருக்கி விடுவினம். தண்ணி ஓடும் வாய்க்காலில் பள்ளம் தோண்டி நாட்டு மருந்துக்கடையில வேண்டிய சரக்குகள் உள்ளிடுத்தப்பட்ட சாராயப் போத்தலை மாதக்கணக்கில் ஊறவைத்து ஒருவித அளவுப் பிரமாணத்தில் பசியெழுப்புவதற்காகச் சாப்பாட்டுக்கு முன்பும் தோய்ச்சலுக்குப் பின்பும் பிள்ளை பெத்தவருக்குக் குடிக்கக் கொடுப்பினம். அளவு கூடினால் அது பாலைக்கட்டிவிடும். இது குடிப்பழக்கத்தில் சேப்பதில்லைக் கண்டியளோ! ஆனாலும் இதில 'உரிசைப்பட்ட' பெண்டுகள் பேறு காலத்துக்கு அப்பாலும் இந்தக் குடிப்பழக்கத்தை விடாது தொடர்வதுண்டு. சாராயம் தாட்ட இடத்தை மாமியின் 'GPS'தான் கண்டுபிடிக்கும். மருமோனாலும் அது ஏலாது.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மருமோனுக்குப் பெரும்பாலும் மாமியார்தான் வில்லி. மாமியாரைக் கரெக்ட் பண்ணித்தான் எதுவும் நடக்கும். அடுத்த பிள்ளைக்கான அலுவல் (பிராரம்பம்) எண்டாலும். என்னெண்டு கேளாதையுங்கோ. அது அப்படித்தான். 'கண்டவர் விண்டிலர்' மாமனார்கள் பெரும்பாலும் இந்த விடயத்தில் 'இந்திய ஜனாதிபதிகள்தான்.' பவர் கிடையாது. விச்சுழி (கெட்டிக்காரி) மாமியிட்ட அகப்பட்ட எத்தனையோ வெள்ளந்தி மருமோன்களை நான் கண்டிருக்கிறன். ஆனாலும் என்னதான் 'பியூஸ்கட்ட' மாமியின்ர கையில இருந்தாலும் விச்சுழி மாமிக்கு 'தண்ணிகாட்டி' மனுசியின் றூமுக்கு முன்னால் குறுக்குநெடுக்காகக் கால்நீட்டிப் படுத்திருக்கும் மாமியில உழக்காமல் இலேசாக ஒரு கடப்புக் கடந்து மாமிக்குத் தெரியாமல் மனிசியின்ர சிக்னலோட மீற்றருக்குள்ளால கரண்ட் எடுக்காமல் நேரடியாக 'லைன்' எடுத்த மருமோன்களும் உண்டு. ஆனாலும் அது பெரும்பாலும் 'கள்ளக்கரண்டு' தான் பாருங்கோ. பத்தாம் மாதம் 'பில்' வரேக்கதான் மாமிக்கு அது தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

ஜே.ஆர். சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற ஒரு இராஜதந்திரி. இலங்கையில் விகிதாசார பிரதிநிதித்துவ ஆட்சி முறைமையையும் ஜனாதிபதி ஆட்சி முறைமையையும் அறிமுகம் செய்தவர். ரணிலின் மாமனார். டி.எஸ்.சேனநாயக்காவின் அமைச்சரவையில் ஜே.ஆர். நிதியமைச்சராக இருந்தார். ஒருமுறை வரவு - செலவுத்திட்டத்தைத் தயாரித்த போது ஒரு சைபரைக் கூடுதலாகப் போட்டு விட்டார் ஜே.ஆர்.வரவு - செலவுத்திட்ட விவாதத்தின்போது இது என்ன வரவு - செலவுத்திட்டமா? எனக் கேள்வி எழுப்பினார் சுந்தரலிங்கம். 'ஏன் என்ன பிரச்சனை?' என்றார் ஜே.ஆர். அதற்கு சுந்தரலிங்கம் தலையைச் சுற்றிக் காட்டி 'உனது தலைக்குள் கோழி முட்டைதான் இருக்கிறது. ஒரு சைபரைக் கூடுதலாகப் போட்டுவிட்டாய்' என்றார். ஜே.ஆர். தலை குனிந்தார்.

12






**மாணவர்களே!**


நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




**ப.ஆஷிக்ஹா,**
வயது - 9
Queen street public School,
Canada.




**பா.மகிபன்,**
தரம் - 8 D
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி



**ஜெ.ஜெகசிகன்**
தரம் - 9
யா/கொக்குவில் இந்து கல்லூரி




**சு.வர்னிதா**
தரம்-6B
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



**எஸ்.ரிஷாந்தி**
தரம்-5
யா/உடுவில் மகளிர் கல்லூரி

**அ.ஆர்த்தி**
தரம் - 8c
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி





**ஆ.திலக்சிகா**
தரம் - 4F
யா/இந்து ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பா என்றொரு அன்பின் ஊற்று

பா.பாலாஜினி

அப்பாவிடம் நான் கண்ட என்றுமே மாறாத பழக்கங்களில் ஒன்று பத்திரிகை வாசிப்பது. வேலை,நேரமின்மை, நோய்நிலை என எதுவாக இருந்தாலும்சரி பத்திரிகை வாசிப்பதை மறக்கவே மாட்டார். சில நாள்களில் ஒன்றிரண்டு பத்திரிகைகளுக்கு மேலும் வாசிப்பார்.

முப்பத்திரண்டரை வருடங்களாக எங்கள் பிரதேசமெங்கும் சுழன்றடித்த துவிச்சக்கரவண்டி, இனி வீட்டோடு ஓய்வுகொள்ளப்போகின்றது.


எல்லோர் வீட்டிலும் வீட்டுத் தலைவனாக அப்பாவே இருப்பார். எங்கள் வீட்டைப் பொறுத்தவரைக்கும் வீட்டின் தலைவன் மட்டுமல்ல வீட்டின் கடிகாரமே எங்கள் அப்பாதான். தபால் நிலைய ஊழியரான அப்பா, மருத்துவத் தாதியான அம்மாவைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். பச்சிலைப்பள்ளியின் பிறப்புவாசியான அப்பா வடமராட்சி கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட என் தாயாரைத் திருமணம் செய்துகொண்டது எவ்வளவு பெரிய கதையோ, அதைவிடப் பெரிய கதை பெண் குழந்தைகள் இருவரை பெற்றெடுத்து அவர்களை ஆளாக்கியதுதான். யுத்த சூழ்நிலை காரணமாக வடமராட்சிக்குக் குடிபெயரவேண்டிய நிலையில் நான் பாலர் வகுப்புக் கூட படித்திராத வயதளவில், கடும் போட்டி நிறைந்ததான வடமராட்சி கல்விச்சூழலில் வீடு,காணி என அனைத்தையும் விட்டுவிட்டு நிர்க்கதியாக அங்கு வாழ்ந்தபோதிலும் கூட அக்காவை ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தராகவும், என்னை ஒரு ஆசிரியராகவும் அம்மாவுடன் இணைந்து உயர்த்திவிட்டிருக்கின்றார். எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. புலமைப் பரிசில் பரீட்சைக் காலத்தில் கணக்கென்றாலே படுகள்ளத்தனமாக இருந்திருக்கின்றது எனக்கும் அக்காவுக்கும். அந்த நிலையில் அப்பா காலையில் எழும்போதே கொப்பியில் கணக்குக் கேள்விகளை எழுதி ஆயத்தமாக வைத்திருப்பார். எழுந்தவுடன் அவற்றைச் செய்துவிட்டுத்தான் பாடசாலைக்குச் செல்வோம். முடித்துவந்ததும் அவை திருத்தப்பட்டு எமக்கான அடிகளும்,விளக்கங்களும் காத்துக்கொண்டிருக்கும். அப்பாவின் அந்த முயற்சிதான் எங்கள் இருவரையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்தது. கரவெட்டிப் பிள்ளைகளை விடவும் முன்னிலையில் நாங்கள் இருவருமே புலமைப்பரிசில் பரீட்சையில் புள்ளிகளை எடுத்ததை அனைவருமே வியப்பாகப் பார்த்ததுண்டு.

அப்பா இந்தப் பூமியில் நான் கண்ட மிகவும் வித்தியாசமான ஒரு மனிதர். ஆடம்பரங்களையோ, அளவுக்கு மீறிய பேச்சுகளினையோ சற்றும் விரும்பாத ஓர் எளிமை வாசி. அதற்காக அவர் ஒன்றும் கோடிகளில் வாழ்கின்ற பணக்காரரும் அல்லர். ஆனால் தெளிவாக முடிவெடுக்கக் கூடியவர். சிறுகச் சிறுகச் சேமித்து அம்மாவுடன் சேர்ந்து இற்றைவரைக்கும் இனிமையாக இல்லறம் நடத்துகின்ற மனிதர். எனக்கு நினைவு தெரிந்தவரைக்கும் அப்பாவுக்கு பழைய பாடல்கள் என்றால் மிகவும் பிடிக்கும்.
சிவாஜி,எம்ஜிஆர்,சரோஜாதேவி,பத்மினி ஆகிய நடிகர், நடிகைகளின் பாடல்களை மிகவும் விரும்பிக் கேட்பார். திருமணத்தின்போது அம்மா பரிசாக வழங்கிய 'பனசொனிக்' ரேடியோவிலே கசற்றுகளின் மூலமும் பாடல்களைக் கேட்பார். கசற்றுகளிலே அவர் விருப்பத்துக்குரிய பாடல்களினைப் பதிவுசெய்து வைத்திருப்பார். நானும் அக்காவும் அப்பாடல்களை எதேச்சையாகக் கேட்பதனாலோ என்னவோ இன்றுவரைக்கும் எங்களுக்கும் பழைய பாடல்கள் என்றால் கொள்ளைவிருப்பம்.

அதுமட்டுமல்லாது இந்தப் பழைய பாடல்களினை எங்கு எப்போது கேட்டாலும் அப்பாதான் ஞாபகம் வருவார். இன்று கசற்றுகளின் பாவனை குறைந்ததால் அதே பழைய பாடல்களினைத் தொலைபேசியில் பதிவுசெய்து கேட்டுக்கொள்கின்றார். தபால்காரனாக தனது அரச பணியைச் செய்துவந்தாலும் தனக்கெனப் பிறந்த இருமகள்களையும் எதனாலுமே குறையவிட்டதில்லை. ஓர் தந்தை எப்படி இருக்கவேண்டுமோ அதன்படி தனது கடமைகளையும் பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றியிருக்கின்றார். அப்பா,அம்மா ஆகிய இருவருமே அரச உத்தியோகத்தராக இருந்ததனாலோ என்னவோ தங்களுக்கான மருமகன்களையும் அரச உத்தியோகம் பார்ப்பவர்களாகவே தேடிக்கொண்டார்கள். ஆனால் அதை நினைத்து அப்பா ஒருபோதும் யாரிடத்தும் பெருமையாகச் சொல்லிக் கொண்டதில்லை.

அப்பா அண்மைக்காலங்களில் மோட்டார் சைக்கிளில் பயணித்தாலும் அப்பாவின் அடையாளம் எப்போதும் ஒரு சைக்கிள் தான். அந்த சைக்கிளுக்குக் காத்துப்போனால் அடிப்பதற்கென்று ஒரு காற்றடிக்கும் 'பம்' வைத்திருப்பார். எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து இன்றுவரைக்கும் அதை அவர் மாற்றியதில்லை. அதிலிருந்து தெரிந்துவிடும் அவர் பொருட்களை எவ்வளவு பத்திரமாக வைத்திருப்பார் என்று. இன்றும் கூட என்னுடையதும், என் மூத்தசகோதரியினதும் ,ஏன் அம்மாவினதும் வேலை,கல்வி தொடர்பான முக்கியமான ஆவணங்கள் எல்லாம் அப்பாவிடம்தான் இருக்கின்றன. பத்திரமாக வைத்திருந்து எப்போதெல்லாம் தேவையென்று கேட்கின்றோமோ அப்போதெல்லாம் தந்துவிடுவார் என்ற நம்பிக்கைதான் அது.

அப்பாவிடம் நான் கண்ட என்றுமே மாறாத பழக்கங்களில் ஒன்று பத்திரிகை வாசிப்பது. வேலை,நேரமின்மை, நோய்நிலை என எதுவாக இருந்தாலும்சரி பத்திரிகை வாசிப்பதை மறக்கவே மாட்டார். சில நாள்களில் ஒன்றிரண்டு பத்திரிகைகளுக்கு மேலும் வாசிப்பார். அதில் அவருக்கு பரம திருப்தி. புத்தகவாசிப்புப் பழக்கமும் இருந்திருக்கின்றது. அதைப் பின்பற்றித்தான் நானும் அக்காவும் புத்தகங்களை வாசிக்கப் பழகியிருக்கின்றோம்.



அவருக்கு நொறுக்குத் தீனிகள் மேல் அதிக ஆர்வம். இனிப்புப் பிரியரும் கூட. மிக்சர், அலுவா, பிஸ்கற் வகைகள் என்றால் நிறைய வாங்கிவருவார். தேநீர் குடிக்கும்போது இவற்றில் ஏதாவது ஒன்றைச் சாப்பிட்டுத்தான் குடிப்பார். அது எங்களுக்கும் தரப்படும். சற்று விலை கூடிய நொறுக்குத் தீனியாக இருந்தால் "இந்தா மருந்து மாதிரிகொஞ்சமாச் சாப்பிடு" எண்டு சொல்லித் தருவார். இற்றைவரைக்கும்அம்மாவுக்கும், எனக்கும், அக்காவுக்கும் தேநீருக்கு ஏதும் சாப்பிட இருந்தால் தான் குடிப்போம். திருமணமாகி வேறிடம் போனபின்னும் கூட எனக்கு இன்னும் அந்தப் பழக்கம் இருந்து வருகின்றது. அப்பாவுக்குச் சமைக்கவும் தெரியும். அவிசு வைத்து அப்பளமும் மிளகாயும் பொரித்துவைத்தாரென்றால் அந்த சாப்பாட்டுக்கு வேறெந்தச் சாப்பாடும் நிகராகாது.எனக்குப் பிடித்த சாப்பாடும் அதுவே.

அப்பாவுக்கு நல்லவடிவான எழுத்து. தெளிவாக எழுதுவார். அவரின் நண்பர்கள் கூட கடிதங்களை எழுதுவதற்கு அப்பாவையே நாடுவார்கள். அம்மா மீது அதிக அன்பு வைத்திருக்கும் அப்பா எனக்கும் அக்காவுக்கும் அம்மாவுடன் இணைந்து ஒரு பெற்றோராகச் செய்யவேண்டிய அனைத்தையுமே சரிவரச் செய்திருக்கின்றார். அதில் குறைவேதும் வைத்ததில்லை. ஆனால் மகள்களாக நாம் செய்யவேண்டியவற்றை அவர்களுக்கு செய்திருக்கின்றோமோ அல்லது செய்து வருகின்றோமோ என்பது சந்தேகமே.

ஒரு தபால் ஊழியராக அப்பா தனது சைக்கிள் பயணத்தில் இருந்து இவ்வருடத்துடன் தனது 60 ஆவது வயதில் ஓய்வினைப் பெற்றுக் கொள்கின்றார். தனது முப்பத்திரண்டரை வருடமாக எவ்வித பிரச்சினைகளுமின்றி தபால் ஊழியப் பணிக்கு பெருமை சேர்த்த ஒரு மனிதர் அவர். அவரது அரச பணிக்குத்தான் ஓய்வு கிடைத்திருக்கின்றதே தவிர வீட்டில் அவருக்காக இருமகள்களும் பெற்றுக்கொடுத்த இரு பேத்திகள் காத்திருக்கின்றார்கள். ஏற்கனவே ஓய்வுபெற்றிருக்கும் தனது மனைவியுடனும், இரு பேத்திகளுடனும் அவரது இனிவரும் பொழுதுகள் நிம்மதியாகவும், ஆரோக்கியமான வகையிலும் கழிந்திடப்போகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம்
## காட்டும் வணிகம்

பண்டைய தமிழ் இலக்கியங்களின் பல்பரிமாணத் தன்மையினை விளக்கும் முகமாக 'சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்' என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைத் தொடர் சஞ்சீவியில் கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ளது. பண்டைய தமிழர் மருத்துவம், பண்டைக்கால தமிழர்களின் வணிகமும் வணிக நடைமுறைகளும், தமிழர் பண்பாடு, பண்டைய தமிழரின் சமூக நோக்கு, பண்டைய இலக்கியங்களின் பொருளாதாரக் கருத்துகள், அறக் கருத்துகள், சங்ககாலப் பெண் கவிஞர்களின் பார்வையில் பண்டைய தமிழர் வாழ்வியல், சமூக வாழ்வியலில் பெண்களின் வகிபாகம் போன்ற விடயங்களை இந்தக் கட்டுரைத்தொடர் வாராவாரம் வாசகர்களுக்குத் தரவுள்ளது.

○ பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
*சந்தைப்படுத்தல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இக்காப்பியம் படைக்கப்பட்ட காலம் குறித்து முரண்நிலைத்தன்மை காணப்படுகின்றது. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்ட கண்ணகி கோவிலுக்கு இலங்கையினை ஆட்சிசெய்த கயபாகு மன்னன் கலந்துகொண்டதாகவும் இலங்கை வரலாறு கூறுகின்றது. இதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு சிலப்பதிகாரம் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. இந்திர விழா ஊர் எடுத்த காதையில் உள்ள பின்வரும் பாடல் வரிகளிலிருந்து எல்லாம் அறிந்த எல்லாம் உணர்ந்த பரம்பொருளாகிய சிவனுக்கும், நீல நிறத்து மேனியனான கண்ணனுக்கும், பலராமனுக்கும் கோவில்கள் இருந்தன என்பது புலப்படுகின்றது.



*பிறவாயாக்கைப் பெரியோள் கோயிலும்*
*ஆறுமுகச் செல்வேள் அணிநிகழ் கோயிலும்,*
*வால்வளை மேனி வாலியோன் கோயிலும்*
*நீலமேனி நெடியோன் கோயிலும்*
*(சிலம்பு 5 : 169 - 172)*

காலத்தால் பிந்திய பக்தி இலக்கியங்களில் குறிப்பாக தேவாரங்களிலோ அல்லது நாலாயிரம் திவ்வியப் பிரபந்தங்களிலோ புகார் நகரில் கோவில் இருந்ததைப் பற்றிய குறிப்புகள் இருந்திருக்கவில்லை. பல்லவர்களின் ஆட்சிக்காலத்துக்கு முன்னரே புகார் நகர் கடற்கோளுக்கு உள் ளானது. ஆகவே இக்காப்பியத்தை கி.பி.7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகவும் கருதமுடிகின்றது. அதேவேளை பண்டைத்தமிழர் "பண்பாடு ஒரு புதிய நோக்கு" என்ற புத்தகத்தில் பேராசிரியர் பாலசுந்தரம் பூம்புகார் நகரம் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாகத் தமிழகத்தின் தலைசிறந்த வணிகத் துறைமுகமாக அமைந்திருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். அதேவேளை சிலப்பதிகாரத்தின் காடுகாண் காதையில் குமரிக்கண்டம் ஆழிப்பேரலைகளால் காவுகொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக:

*பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்*
*குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள*
*(சிலம்பு 9 : 19 20)*

இவற்றினை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் காலத்துக்குக் காலம் ஆழிப்பேரலை தமிழர்களின் அழகிய பண்டைய நகர்களினைக் காவுகொண்டது என்பதை உணரமுடிகின்றது. சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலத்தினை இத்தகைய வரலாற்று இலக்கியச் சான்றுகளினை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் திடமாக இனங்காணுதல் கடினமாகும்.

சிலப்பதிகாரம் சோழ நாட்டின் பூம்புகாரில் தொடங்கி அதாவது பூம்புகாரினைப் பூர்விகமாகக் கொண்ட கண்ணகி கோவலனினை நாயகர்களாக கொண்டு, உறையூர் வழியே பாண்டிய மன்னனின் தலைநகரில் நீதி தவறிய பாண்டிய மன்னனிடம் நீதிகேட்டு வழக்குரைப்பதாக அமைகிறது. பின்னர் மதுரை நகரினைத் தீக்கிரையாக்கி, கண்ணகியின் மறைவுக்கு பின்னர் சேரப் பேரரசினால் வஞ்சியில் கண்ணகிக்கு சிலைவைத்து வழிபடப்பட்டது. இவ்வாறு சோழ, பாண்டிய, சேர நாடுகளுடனும் அவற்றின் மூன்று பெரும் நகரங்களான புகார், மதுரை, வஞ்சி என்பவற்றுடன் தொடர்புடைய ஓர் முத்தமிழ்க் காப்பியமாகும். இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழும் இங்கு ஆதிக்கம் செலுத்துவதனால் முத்தமிழ்க்காப்பியம் என்பர்.

இக்காப்பியத்தின் அமைப்பினை நோக்கில் புகார், மதுரை, வஞ்சி ஆகிய பெயர்களில் மூன்று காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டுள்ளது. புகார் காண்டமானது மங்கல வாழ்த்துப் பாடல், மனையறம்படுத்த காதை, அரங்கேற்று காதை, அந்திமாலைச் சிறப்புசெய் காதை, இந்திர விழவு ஊர் எடுத்த காதை, கடலாடு காதை, கானல் வரி, வேனில் காதை, கனாத்திறம் உரைத்த காதை, நாடுகாண் காதை என பத்துக் காதைகளினைக் கொண்டுள்ளது. புகார் காண்டத்தில் கோவலன், கண்ணகியின் வாழ்வியல் முறைகளும் சோழ மன்னனினைப் பற்றிய தகவல்களும் அதிகமாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளன. மதுரைக் காண்டமானது

(தொடரும்)



○ ரஜிதா

# அனார்
## சில குறிப்புகள்

அனார் ஈழத்து இலக்கியச்சூழலில் எனக்கு மூத்தவர். இருப்பின் சுழலைப் பற்றுக்கொண்டதாக்கும் அன்பும், காமமும், காதலும், இயற்கையும், பிரபஞ்சவெளியும், அதில் அலையும் ஒவ்வொரு படிமங்களும் அனாருடைய தனித்துவமான மொழி. தன்னந்தனியே வனாந்தரங்களில் ஆறி இளைப்பாறும் நெடுந்தூர ஆத்மார்த்த உணர்வு. காமத்தின் மொழியில் பொசுக்கும் தீச்சுடரும், காதலுக்கென்றேயான தருணங்களில் அதற்கென்றே தனித்துவமான மெல்லதிர்வையும் திரட்டிநிற்பது.

எனது தலைமுறைக்கு அனார் என்பவர் கொடை அளிக்கும் தெய்வம். சுழலில் சிக்கிப் பிரமை பிடித்த நாட்களிலெல்லாம் அதைக் கடினமாகக்கூட முன்வைக்காது. அவருக்கேயான தாயின் வாஞ்சையோடு "உணர்வுக்குள்ளே மலையும் வனமும் பிரபஞ்ச வெளியும் உண்டு!" என்கிறார்..

2

அனாரை அறிந்துகொண்ட காலங்களென்பது சொற்பமே. ஆயினும் என்னுள் விரியும் அகவுலகுசார் தேடலில் சந்தேகங்கள் ஏதுமின்றி பறந்தலைய வழிகாட்டும் வாழ்வின் அரை நூற்றாண்டைக் கடக்கும் கனிவின் ஊற்று. மொழிக்கெனவும், வாழ்விற்கெனவும் தம்மைக் கூறுபோட்டு ஆத்மாவின் அழைத்தலிற்கென்று படையலாக்கிய அன்னா அக்மதோவா, ப்ரீடா காலோ போன்று அனார் ஈழத்து இலக்கியச் சூழலில் மத, மொழி அடக்குமுறைகள் மூச்சடைக்கவைக்கும் ஊழிக்காலத்திலிருந்து உதித்த ஒரு வரம்.

காதலையும் காமத்தையும் உரையாடுவதென்பது இழுக்கானது என இன்றுவரை கற்பிக்கப்பட்டிருக்கும் சமூகமென்ற கரும்பாறையில் அனாரின் கவிதைகள் உண்டாக்கியிருக்கும் சிறு கரைவென்பது கொண்டாடப்பட வேண்டியது. அதிலும் முக்கியமாக பெண்மனதின் வேட்கையை, கனவை முற்றளிக்கும் காமமும் காதலும் எவ்வாறு நிகழ்கின்றன? அவ்வுயிர்களின் கனவுகளுக்குள் விரியும் வாழ்வென்பது எவ்வாறிருக்கும்? சமூக இருப்பில் அந்த ஆழ்மனத்தின் கலகங்கள் எதைக் கோரிநிற்கின்றன என்பதை கலைஞர்கள் போல தன்னைத் தின்னக்கொடுத்து அழித்தவர்களின் நினைவிருப்புகள் என்றைக்கும் உரையாடப்படவேண்டியவை. ஆதியிலிருந்து பேசப்பட்டுக்கொண்டிருக்கும் மானுட வாழ்வின் பெருங்கனவென்பது மனதுக்கும், மூளைக்குமான போரில் அமைதியடையாத ஆதார உணர்ச்சிகள் வெவ்வேறு உருக்கொண்டு அலைச்சலுறுவதும், இருப்பை அழித்துப்போவதிலுமே நிகழ்ந்து கொண்டிருப்பவை.

வாழ்வு நாம் தீர்மானிக்காமல், எமது எந்த முடிவுகளினதும் துமியளவு தீண்டல்களும் இல்லாமல் இப்பேரண்டத்தின் மீச்சிறு ஆத்மாவாக வந்து விழுந்த போலிருந்து உருப் பெருகத்தொடங்கியது. இவ் உடலின் அழிவுக்கான காலம் வரையில் அதனுள் அருட்டும் ஆத்மாவின்வழி தூண்டப்பட்டுப் பெருகும் வாழ்விது. ஒவ்வொரு பராயங்களிலும், சூழல்களிலும் எதனை என்னவாக அவதானிக்கின்றோமோ, அணுகுகின்றோமோ அதன்வழி எம் ஆத்மாவின் பெருந்தாகத்தின் வழியே ஒவ்வொருவரும் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். இடையில் கற்றலினாலும், அனுபவ அறிவின் வழியாகவும் ஒவ்வொன்றையும் கூர்ந்து அவதானிக்கும் அவ்வவ் வயதுகளின் பக்குவ நிலைகளை அடைகின்ற தருணங்களில் எம் இவ்வாழ்வும், நம்பிக்கைகளும் வெவ்வேறு கதாபாத்திரங்களாகத் திரிபடைந்து கொண்டிருக்கின்றன. எவருமே ஒரே எண்ணங்களைக் கொண்டவர்களல்லர்.


*(அடுத்த வாரமும் பேசுவோம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லுமாலாவும் பயணமும்

○ கோகுலராகவன்

சைக்கிள் ஓடத்தொடங்குகின்ற வயதில் சொந்தமாக ஒரு சைக்கிள் வைத்திருக்கிற கனவு தொடங்கி இருந்தது. இப்ப மோட்டார் சைக்கிள் மாதிரித்தான். அப்ப சைக்கிள் வாங்குவது சாதாரண விடயம் அல்ல. அப்பா தன்னுடைய றலி



சைக்கிளை 1969 இல் 300 ரூபாவுக்கு வாங்கியதாகச் சொல்வார். ஆனால் ஒவ்வொரு தசாப்தமும் சைக்கிளின் விலை பத்து மடங்காக மாறிக் கொண்டேயிருந்தது.

எங்கட வீட்டில் அப்பாவும் அண்ணன்கள் இரண்டு பேரும். ஆனால் இரண்டு சைக்கிள். அப்பா சைக்கிளில் பளைக்குப் போய்,பின்னர் பருத்தித்துறை டிப்போவுக்கு பஸ்ஸில் போய்விடுவார். அண்ணன்கள் இரண்டு பேரும் அடுத்த சைக்கிளில் பள்ளி போய்விட நம்ம பாடு அநேகமாக நடைதான். இல்லாவிட்டால் "நானும் வரட்டேதான்". அதாவது யாரேனும் நண்பனின் பாரில் அல்லது கரியலில் தொத்தவேண்டும். இது நடந்து போகிறவர்களின் வேண்டுதல் வார்த்தையும் கூட. "காத்துக் காணாது" இது அநியாயமான ஒரு பதில்.

பல தடவை மார்க்கண்டு மாமாவை (கள்ளன், மடையன் இன்னும் பல) திட்டி இருக்கிறேன் .

அவரின்ர சைக்கிளுக்கு ஒருநாளும் காற்று நிற்பதில்லை. பலதடவை என்னை ஏற்றிப் போகிறவன் "சொக்கன்" என்கிற இராசகுமார்.

இருக்கட்டும்.

பளையில் தோட்டத்துக்குப் பேர்போன இடம் இன்னாசி என்ற தோட்ட நிலம். இங்கே புகையிலை, மிளகாய், வெங்காயம் நல்லாய் வரும். பளைப் புகையிரத நிலையத்துக்குப் பின்னால் இருக்கிறது. இப்ப பல வீடுகள் வந்துவிட்டன. 1987 இல் இந்தியன் ஆமி வந்த காலம். சின்ன அண்ணன் பளையில் இந்திரா ரீச்சரின் தோட்டக் காணியைக் கேட்டுவாங்கி இரண்டு அந்தர் வெங்காயம் வைத்து இறைத்தான். ஒரு பத்து அந்தர் விளைந்தது. அதை அப்பா 3000 ரூபாக்கு விற்று சின்ன அண்ணனுக்கு புது சைக்கிள் வாங்கிக்கொடுத்தார். அப்ப லுமாலா, ஏசியா, ஈஸ்ரன், ஹீரோ சைக்கிள்கள் சந்தையில் கிடைத்தன. இதில ஏசியா பார், போக் விரைவில் உடைக்கும் என்றதால வாங்கவில்லை. அதனால் லுமாலா சைக்கிள் நீலக்கலரில் வாங்கினார். பளையில் "இது றமணன்ரை சைக்கிள்" என்று எல்லோருக்கும் தெரியும். லுமாலா ஜப்பான் தயாரிப்பு. எங்களிடம் அது 2009 வரை அப்பா வன்னியில் விட்டிட்டு ஓடி வரும்வரை நின்றது.




எல்லாம் பழைய கதை.

இனிப் புதிய கதை

அண்மையில் இந்த லுமாலா சைக்கிள் ஜப்பானில் தற்போதும் உற்பத்தி ஆகிறதா? என்று இணையத்தில் தேடியபோது, அந்தக் கம்பனி 1985 முதல் தனது உற்பத்தியை நிறுத்திக்கொண்டுவிட்டது தெரிந்தது. அப்ப இலங்கையில் புதிய லுமாலா சைக்கிள் எப்படி கிடைக்கிறது? என்று தேடியபோது ஆச்சரியப்படத்தக்க தகவல் கிடைத்தது.

இதற்காகவே இந்தப் பதிவு.

லுமாலா சைக்கிள் தற்பொழுது இலங்கையிலேயே உற்பத்தியாகிறது. அட எங்கட நாட்டில் ஒரு சைக்கிள் உற்பத்தி கம்பனி இருப்பது எவ்வளவு ஆச்சரியம். கொழும்பு பாணந்துறையில் இருக்கும் "சிற்றி சைக்கிள் ஸ்ரோர்" என்ற நிறுவனமே லுமாலா சைக்கிளைத் தயாரிக்கின்றது. 1985 இல் ஜப்பான் லுமாலா சைக்கிள் நிறுவனத்திடம் அதன் தயாரிப்பு உரிமையை வாங்கிய சிற்றி சைக்கிள் நிறுவுநர் எம்.எம்.மிப்ஃலால் இலங்கையில் லுமாலா வகை சைக்கிளை உற்பத்தி செய்யத்தொடங்கினார். ஜப்பான் தரத்திற்கு இணையாகவே அவர்களது உற்பத்தி இடம்பெறுகிறது.

இன்றுவரை 1500 வரையான ஊழியர்களுக்கு இந்த நிறுவனம் வேலை வழங்கியுள்ளது. ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கும் நவீன வகை சைக்கிள்களை, கியர் வசதியோடு உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்கிறது. கொரோனாக் காலத்தில் இலங்கையரைச் சுமந்து சென்றது இந்த நிறுவனம்தான். இதைவிட மின்சாரத்தில் இயங்கும் "லைகன்" என்ற மின்மோட்டார் சைக்கிளையும் இப்போது உற்பத்தி செய்கிறார்கள். மூலப்பொருள் இறக்குமதிவரி அதிகரிப்பால் தமது உற்பத்தி விலையை மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளதாக அதன் தற்போதைய இயக்குநர்கள் கவலை தெரிவிக்கின்றனர். புதிய அரசு சில வரிச்சலுகைகளை வழங்கினால் நல்லம்.

இந்த நிறுவனம் இலங்கையில் தொடர்ந்து இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயம். ஏனெனில் கிராமப்புற மக்கள், பாடசாலை மாணவர்கள் இப்போதும் இந்தச் சூழல்நேய வாகனத்தையே பயன்படுத்திவருகின்றனர். ஒரேயொரு கேள்வி இந்த நிறுவனத்தினரிடம், ஏன் லுமாலா என்ற ஜப்பான் பெயரை விட்டுவிட்டு புதிய ஒரு பெயரில் உங்கள் உற்பத்தியை முன்னெடுக்கவில்லை? "அது சரி எங்கட ஆட்கள் வெளிநாட்டு சவர்க்காரம் என்றால் இரண்டுதரம் குளிக்கிறவை என்டு எனக்கும் தெரியும்."

அண்மையில் இந்த லுமாலா சைக்கிள் ஜப்பானில் தற்போதும் உற்பத்தி ஆகிறதா? என்று இணையத்தில் தேடியபோது, அந்தக் கம்பனி 1985 முதல் தனது உற்பத்தியை நிறுத்திக்கொண்டுவிட்டது தெரிந்தது. அப்ப இலங்கையில் புதிய லுமாலா சைக்கிள் எப்படி கிடைக்கிறது? என்று தேடியபோது ஆச்சரியப்படத்தக்க தகவல் கிடைத்தது.

# உணர்ப்திணம்

பாகம் 3

○ இராகவன்

எனக்குக் குபேரன் சிலையைப் பாக்கேக்குள்ள எப்பவும் ராஜேஸ்வரண்ணையின்ர ஞாபகந்தான் வரும். ஏனெண்டால் அவர் அச்சொட்டா குபேரன் சிலையைப் போலவேயிருப்பார். ஆனால் பெரிசாச் சிரிக்கமாட்டார். சிரிக்காமல் அசல் பகிடியெல்லாம் விடுவார். அவரின்ர கடைக்குள்ளை நுழைஞ்சவுடன் ஒரு நறுமணம் வீசும். அதை மணக்க மணக்க நல்ல இதமாயிருக்கும். இந்த நறுமணத்தை அதுக்குப்பிறகு ஓரிடமும் நுகரேல்ல. அதோட கடைக்குள்ள ஒரு ரியூப்லைற் எப்பவும் எரிஞ்சுகொண்டிருக்கும். 1990 காலப்பகுதிக்குப் பிறகு அவர் அந்தக் கடை நடத்திறதை விட்டுட்டார். பிறகு கிளியண்ணை எண்டொராள் அந்தக் கடையை நடத்தினவர். பிறகு அவரும் வெளிநாடு போயிட்டார். இப்ப அந்தக் கடையில்லை.

ராஜேஸ்வரண்ணை 1990 பிற்பகுதிவரைக்கும் ஊரிலையிருந்தவர். மனிசிக்காறி சரசக்கா அகாலமரணமடைஞ்சதைத் தொடர்ந்து அவர் பிள்ளையோட வெளிநாட்டுக்குப் போய் இப்ப கிட்டடியிலதான் செத்தவர். தீபாவளிக்கார்ட் விக்கிறதில பேமஸான இன்னொரு கடை தம்பையா கடை. அந்தக் கடை அத்துளு அம்மன் கோயிலுக்குப் போற வழியில அரசமரத்துக்கு கீழையிருந்தது. தம்பையாண்ணை நீலக்கோடன் சாறத்தை மடிச்சுக்கட்டி வெள்ளைச்சேட்டும் போட்டிருப்பார். நல்ல சிவலையாள். எப்பவும் கொடுப்புக்குள்ளை வெத்திலை போட்டிருப்பார். அந்தக்கடையிலயும்நல்ல தீபாவளிக்காட்டுகள் விக்கும். பிறகு அந்தக் கடையை அத்துளு அம்மன் கோயில் கேணிக்கு நேரே கிழக்காயிருக்கிற றோட் பக்கம் மாத்திச்சினம். தம்பையாண்ணையின்ர மகன் சர்வண்ணை அந்தக் கடையைப் பிறகு நடத்தினவர். இப்பவும் அந்தக்கடையிருக்குது.

10

அத்துளு அம்மன் கோவில்ல ஒவ்வொரு நவராத்திரி காலத்திலும் சிலப்பதிகாரப் படிப்பு நடக்கும். அதிலை சிலப்பதிகாரம் படிக்கிறதில சர்வண்ணையும் ஒராள். நவராத்திரி காலத்தில் சிலப்பதிகாரம் படிக்கிற நடைமுறை வேறெங்கையுமிருக்கிறதாக நான் இதுவரை கேள்விப்படேல்ல. மற்றது தீபாவளிக்கார்ட்டுக்களின்ர பொற்காலம் எண்டது என்னைப்பொறுத்தவரை 1990களோட இல்லாமப்போச்சு.

சினிமா நடிகர்களின் படங்கள் இன்னொரு காலப்பதிவு எண்டுதான் சொல்லோணும். 1980களின்ர பிற்பகுதியில நதியாவின்ர படங்கள்தான் அதிகளவில வந்தது. அந்தளவுக்கு வேறையொருத்தருக்கும் வரயில்ல எண்டுதான் சொல்லோணும். நடிகர்களில ரஜினிகாந்துக்கு அப்படிக் கொஞ்சம் வந்திருக்கு. சத்யராஜ் அடுத்த இடத்தில இருந்தார். பிறகு விஜய், அஜித் எண்டு மாறிச்சுது. விஜயகாந்தும் இதுக்குள்ள வந்துபோயிருக்கிறார். கமலும், ஸ்ரீதேவியும் கொஞ்சங் கலக்கியிருக்கினம். பிறது அம்பிகா, ராதா, ரேவதி, அமலா எண்டு வந்து குஷ்புவில முடிஞ்சுது. இப்ப அந்த ரெண்ட் இல்லையெண்டுதான் சொல்லோணும்.

சுவாமிப்படங்களுக்கும் இப்ப துண்டற மவுசு இல்லை. இப்ப ஆரும் மினக்கெட்டுத் தீபாவளிக் கார்ட் வாங்கித் தபால்ல அனுப்பிறேல்ல. முந்தியெல்லாம் தீபாவளிக் காலம் வந்தால் தபால் பீயோன் கைமுழுக்க வெள்ளை என்வலப் கட்டுத்தானேயிருக்கும். அவர் 'டிங் டிங் டிங்' எண்ட மணியடிக்கேக்குள்ளையே எங்களுக்கும் ஆரும் கார்ட் அனுப்பியிருப்பினமோ? எண்ட எதிர்பார்ப்பிருக்கத்தான் செய்யும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர். பிரகாஷ்

# புடின் என்னும் போர்த்தந்திரி

உக்ரைனுக்கு எதிரான போர் வெற்றி என்பது எனக்குப் பெரிய விடயமல்ல. ஆனால் அந்த வெற்றி எப்போது எங்களுக்குத் தேவை என்பதில் எம்மிடம் தனித் திட்டங்கள் உள்ளன என்று அறிவித்திருக்கின்றார் ரஷ்ய அதிபரான விளாடிமிர் புடின். அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டு 48 மணிநேரத்துக் குள்ளாக ரஷ்யாவுடன் நட்புறவை மீண்டும் ஏற்ப டுத்தத் தயார் என்று ஜேர்மனியின் அதிபர் ஓலாப் ஷோல்ஸ் தெரிவித்திருக்கின்றார். இந்த இரண்டு கூற்றுகளின் பின்னுள்ள அரசியலும், அதில் மறைந்துள்ள இராஜதந்திரமும்தான் புடின் எவ் வளவுபெரிய இராஜதந்திரி என்பதையும் அவரின் வல்லமை என்ன? என்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்றதும், உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல் உடன டியாக முடிவுக்கு வரும் என்றுதான் பலரும் கருதி னார்கள். ஆனால், அந்தப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவதில் ரஷ்யாவுக்கு உடன்பாடில்லை என்பதே நிதர்சனம். ஏனெனில், உக்ரைனை நேட்டோவில் இணையவிடக்கூடாது என்பதற்காக மட்டும் ரஷ்யா போரிடவில்லை. இந் தப் போரின் மூலம் மிகப்பெரும் பொருளாதாரச் சிதைப்பை ரஷ்யா மேற்கொண்டு வருகின்றது.

இன்று உக்ரைன் ஏறக்குறைய 60 வீதம் சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது. உக்ரைனின் அதிபர் மாளிகை, கீவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங் கள் நீங்கலாக உக்ரைனின் உருப்படியாக எஞ்சி யிருக்கும் கட்டடங்கள் மிகக்குறைவு. சிரியா எவ் வளவோ பரவாயில்லை என்றும் கூறும்படியாக உக்ரைன் மாற்றப்பட்டிருக்கின்றது. உக்ரைனின் மின்கட்டமைப்பு, குடிதண்ணீர் விநியோக வலயங் கள் மீதுதான் ரஷ்ய ஏவுகணைகள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. ட்ரம்ப் ஜனாதிபதியானதும் இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு வந்தாலும் கூட தனது உட்கட்டமைப்பை முழுமைப்படுத்த குறைந்தது ஒரு தசாப்தம் வரையாவது உக்ரை னுக்குத் தேவை. இவ்வாறானதொரு நிலையில், உக்ரைன் மீண்டும் நேட்டோ தொடர்பில் சிந்திக் காது. கால்கள் இல்லாதவன் சப்பாத்துக்கு அழ மாட்டான் இல்லையா? அந்தத் திட்டத்தைத்தான் இங்கு கைக்கொண்டிருக்கின்றார் புடின்.

ஆனால், இன்றைய திகதியில் இதுவெல்லாம் ஒன்றுமேயில்லாத விடயம். இப்போது பேசுபொ ருளாகும் விடயங்கள் என்னவென்றால், உக்ரை னுக்காக ரஷ்யாவைப் பகைத்த மேற்குலக நாடுக ளில் இன்று அரசியல் நிலையற்ற தன்மை ஏற்பட் டிருக்கின்றது. ஜேர்மனியின் அதிபர் ஓலாப் ஷோல்ஸ் பெரும்பான்மையை இழந்துள்ளார். தேர்தலொன்று அறிவிக்கப்பட்டிருக்கும் நிலை யில், எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு விலைக் குறைப்பை மேற்கொள்ளாது அவரால் பொதுமக் கள் முன்னிலையில் பரப்புரைக்காகச் செல்லமு டியாது. ஆதலால்தான், ரஷ்ய எரிபொருள்கள் மற்றும் எரிவாயுவைக் கருத்திற்கொண்டு அவர் ரஷ்யாவுடன் நட்புறவுக்குத் தயார் என்று அறிவித் திருக்கின்றார்.

ஜேர்மனியில் மட்டுமல்ல, கனடாவில் லிபரல் கட் சிக்கு வழங்கிய ஆதரவைத் திரும்பப் பெற்றுள்ளது புதிய ஜனநாயகக் கட்சி. கனடாவில் அடுத்த நாடா ளுமன்ற அமர்வில் பிரதமர் ட்ரூடோவின் ஆட்சி முடிவுக்கு வரவுள்ளது. பிரான்ஸில் அரசியல் நிலையற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. பிரிட்டனிலோ மிகக் குறுகிய காலத்தில் அதிகளவான ஆட்சிமாற் றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கையில் இடம் பெற்ற 'மைத்திரி- ரணில்' அரசாங்கத்தின் நிலை பிரான்ஸில்.

இவ்வளவு ஏன்? அமெரிக்காவான அமெரிக்காவி லேயே ஜனநாயகக் கட்சி புறக்கணிக்கப்பட்டு ட்ரம்ப் அரியணை ஏற்றப்பட்டுள்ளதன் பின்னணி யில், ரஷ்ய அதிபர் புடினை பைடனும் அவருடைய தரப்பினரும் பகைத்து வர்த்தகத்தைத் துண்டித்த தால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிதான். இவை யெல்லாமும்தான் ரஷ்ய அதிபர் புடினின் தற்துணி வுக்கும், 'உக்ரைனுக்கு எதிரான போர் வெற்றி எனக்குப் பெரிய விடயமல்ல. அது எப்போது என் கைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்ற திட்டமிடல் எனக்கு உள்ளது' என்று அவர் கூறியமைக்கும் காரணம்.

இந்தப் போரை எவ்வளவுக்கு எவ்வளவு விரைவாக ட்ரம்ப் முடித்து வைக்கின்றாரோ அவ்வளவுக்கு மேற்கு நாடுகளுக்கு நல்லது. ஏனெனில், உக் ரைனை ரஷ்யா நிலரீதியாக மட்டுமே ஆக்கிரமிக் கும் அதேவேளை மேற்கு நாடுகளை பொருளா தாரத்தால் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. அதிலும், அமெரிக்காவின் பணம் அமெரிக்கா வுக்கே என்ற கொள்கையை மூச்சாகப் பின்பற்றும் ட்ரம்பின் ஆட்சியில், ரஷ்யாவின் பிடியில் மேற்கு நாடுகள் சிதைந்து சின்னாபின்னமாகும். உல கமே ஓரணியில் நின்று எதிர்த்தாலும், அதிலும் அமெரிக்கா போன்ற நாடுகளின் செல்வாக்குக்கு மத்தியிலும் - தன் நாட்டை இரும்பு அரணாகக் காத்துநின்று, தனக்கெதிரான கூட்டணியை அடி யோடு துடைத்தெறிவதால்தான் புடினை 'ஆளப் பிறந்தவர்' என்கின்றனர் ரஷ்யர்கள்.

# புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



கட்சிகள் தாங்களாக ஐக்கியப்பட வேண்டும். அந்த அடிப்படை யில்தான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தீர்வை நோக் கிய ஐக்கியத்துக்கான முன்னெடுப்புகளைப் பார்க்கவேண்டும். அது ஒரு சுடலை ஞானம் தான். தேசமாக மெலிந்த பின் ஏற்பட்ட ஞானம். எனினும், தேர்தல் முடிவுகளில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் முன்னணி சிந்திக்குமாக இருந்தால் அதை வரவேற்கலாம்.

ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் வளர்ந்துவரும் உட்பகையானது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஐக்கியத்துக்கான அழைப்பை சவால்களுக்கு உட்படுத்தும். தமிழ்மக்கள் பேரவை யின் முன்மொழிவின் அடிப்படையில் தீர்வு முயற்சிகளை எதிர்கொள்ளவேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருக்கிறது. ஆனால் சுமந்திரன் தெரிவிக்கும் கருத்துகள் அந்த அழைப்பை வரவேற்பவைகளாக இல்லை.

சுமந்திரன் இப்பொழுதும் கட்சிக்குள் செல்வாக்கு மிக்கவர் போலவே காணப்படுகிறார். சிறீதரன் கட்சியைத் தன் கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவர முடியாதவராகவும் காணப்படுகிறார். எனவே தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் தலைமைத்துவ முரண்பாடானது, புதிய யாப்புருவாக்க முயற்சிகளிலும், உள்ளூ ராட்சிசபைத் தேர்தலிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் உண்டு. முன்னணியின் ஐக்கிய முயற்சிகளின் அடுத்த கட்டமானது, தமிழரசுக் கட்சியின் தலைமையை யார் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது.

அது மட்டுமல்ல, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஒரு கூட்டாக என்ன முடிவை எடுக்கப்போகிறது? ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுவேட்பாளரை முன்னுறுத்திய தமிழ்த்தே சியப் பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் தமிழ்மக் கள் பேரவையின் முன்மொழிவை வரவேற்று எழுதப்பட்ட வாசகங்களை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சில கட்சித் தலைவர்கள் நீக்குமாறு கேட்டார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம் பேரவைக்குள் தாங்கள் இருக்க வில்லை என்பதாகும்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், தமிழ்மக்கள் பேரவையின் முன்மொழிவின் அடிப்படையில் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் எந்தளவு தூரம் வெற்றி பெறும் என்பதனை பொறுத் திருந்தே பார்க்கவேண்டும். அவ்வாறு வெற்றி பெற்றாலும் அது தேசத்தை திரட்டுவதற்கான ஒரு முழுமையான ஐக்கியமாக இருக்கமுடியாது. ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த அனுபவம் அத்தகையதே. தமிழ் மக்களை வாக்காளர்களாக, விசுவாசி களாக, பக்தர்களாக, வெறுப்பர்களாகப் பிரித்து வைத்திருப்பது கட்சிகள்தான். அவ்வாறு பிரித்து வைத்திருந்ததன் தோல்விகர மான விளைவுகளினால் கட்சிகள் தங்களுக்கு இடையே ஏதா வது ஓர் ஐக்கியத்துக்கு போக முயற்சிக்கக்கூடும். ஆனால் அதுமட்டும் தேசத்தைத் திரட்ட உதவாது. அது ஒரு தொடக்கமாக இருக்கலாம். தமிழ்ப் பொதுவேட்பாளரை முன்நிறுத்திக் கிடைத்த அனுபவம் அதுதான்.

எனவே இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தலும் ஆண்டின் முடிவிலும் நடந்த நாடாளுமன்றத் தேர்தலும் தமிழரசியலின் சீரழிவைக் காட்டின. எனினும் செப் ரெம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் கடந்த 15ஆண்டு கால தமிழரசியலில் ஒரு புதிய அனுபவத்தை கொடுத்திருக்கி றது. தமிழ்மக்கள் எப்பொழுதும் தேசமாகத் திரள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதே அந்தச் செய்தி. அதுதான் இந்த ஆண்டின் நற்செய்தியும்கூட. அந்த நற்செய்தியில் இருந்து திட்டமிட்டால் அடுத்த ஆண்டை ஒரு வெற்றி ஆண்டாக மாற்றலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org